உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௪.] தாதுஹூ பங்குனிமீ [பகுதி-௫.
Vol. 34 March—April 1937. No. 5.

## நியாயப்பிரவேச மணிமேகலை.

(௯௨அ—ஆம் பக்கத்தொடர்ச்சி)

கீழ்ச்சொல்லப்பட்ட காரிய காரண சாமானியானுமானங்கள் மூன்றும், சாதனசாத்தியங்களுக்கு அன்னுவயவியாத்தி (உடன்பாட்டுடனிகழ்ச்சி) உண்மையால் அன்னுவயானுமானமாயின.

### அனன்னுவயாநுமானம்.

மேல், சாதனசாத்தியங்களுக்கு அன்னுவயவியாத்தியில்லாத பக்ஷத்தில், அவ்வன்னுவயவியாத்தியின் மறுதலையான அனன்னுவயவியாத்தி இருந்தால் அவையும் நல்லனுமானங்களாமெனக் கருதி, அனன்னுவயம் எனப்பெயர்தந்து மற்றோரனுமான விசேடம் சொல்லப்படுகிறது. இது நிறுத்தமுறையுட் சொல்லப்படாமையால் ஆங்குச் சொல்லப்பட்ட அனுமானவகையுள் அடங்கியதென்று தோன்றுகிறது. இதன் இலக்கணங்கள் முற்கூறிய அனுமான இலக்கணங்களினின்றும் வேறுபட்டன. முற்கூறிய அனுமானங்களில் சாதனத்தினின்றும் சாத்தியம் வியாபகமாய் (மிகுநிலையாய்) இருக்கும். இவ்வனன்னுவயானுமானத்தில் அவ்வாறின்றியே சாத்தியத்தினின்றும் சாதனம் வியாபகமாயிருப்பதனால் வியாத்திவாசகங்கள் மாறுபடுகின்றன. இவ்வனுமானத்தை வாக்கியநடையில் காட்டி விளக்கிக்கொண்டு பின்பு செய்யுட்பகுதியை ஆராய்வோம்:—

*

I இவ்வனுமானத்தின் சபக்கப்பகுதி வருமாறு:—

(1) இவ் வெறுநிலத்தில் குடம் இல்லை (பக்கவசனம்).

(2) (அது) கட்புலனாகாமையால் (ஏதுவசனம்).

(3) எது எது இல்லையோ அது அது கட்புலனாகாது; முயற் கொம்புபோலும் (சாதன்மிய திருஷ்டாந்தவசனம்).

(4) இதுவும் அங்ஙனம் (சாதன்மிய உபநயவசனம்). இதன் பொருள்: இன்மையினுடனிகழ்ச்சியுடைய கட்புலனாகாமையுடையது என்பது.

(5) ஆதலின் இங்ஙனம் (சாதன்மியநிகமனவசனம்). இதன் பொருள்: கட்புலனாகாமையின் உடனிகழ்ச்சியுடைய குடமின்மையுடையது என்பதாம்.

இதனுள் பக்கப்பொருள்; வெறுநிலம்; அதில் குடமின்மை துணிபொருள்; அப் பக்கப்பொருளில் குடம் கட்புலனாகாமை ஏதுப்பொருள்; இதற்குச் சபக்கப்பொருள் இன்மைப்பொருளின் நிலைக்களங்கள்; அவை முயற்றலைமுதலியன. அவற்றில் கொம்பின்மைமுதலியன திருஷ்டாந்தப்பொருள்.

இவற்றைக்கொண்டு அன்னுவயத்திற் சபக்கதிருட்டாந்தங் காட்டுதற்குரிய வியாத்திவாசகம், 'யாது யாது கட்புலனாகாததோ அது அது இன்மைப்பொருள்' என ஏதுப்பொருளை வினைவடுக்கால் முற்கூறிச் சுட்டடுக்கால் துணிபொருளைப் பிற்கூறுதல் முறை; அங்ஙனங் கூறில், கட்புலனாகாத காலம் திக்கு ஆன்மா முதலிய பிறபொருள்கள் இல்லனவாகாமல் உள்ளனவாயிருத்தலால் வியாத்திவசனம் பிழைபடுவதாம். அப்பிழைபாடு வாராமைப் பொருட்டு அன்னுவயவியாத்திகொள்ளாது அதன் மறுதலையான *அனன்னுவயவியாத்தி கொள்ளப்பட்டிருக்கிறது.

---

* அனன்னுவயவியாத்தியாவது: ஏதுவுள்ள இடமெல்லாம் துணிபொருளுண்டு என்று கூறும் அன்னுவயவியாத்திக்கெதிராகத் துணிபொருளுள்ளவிடமெல்லாம் ஏதுவுண்டென்று காட்டும் மறுதலை (எதிர்மறை) யுடனிகழ்ச்சி.

இது அன்னுவயவியாத்தியின் மாறுபட்டதாயினும் சாத்திய சாதனங்களுக்கு உடன்பாட்டுடனிகழ்ச்சி தப்பாதிருப்பதால் சபக்கதிருட்டாந்தத்துக்கு உறுப்பாகக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதனால், துணிபொருளுள்ள இடமெல்லாம் ஏதுப்பொருளும் உண்டு என்னும் உடனிகழ்ச்சி பெறப்படும். படவே, ஏதுப்பொருளுள்ளவிடத்துத் துணிபொருள் உண்டென்று தெளியப்படுமென்பது இந்நூன்மரபினர்கொள்கையென்று தோன்றுகிறது.

II. இனி இதன் விபக்கப்பகுதி வருமாறு:—

(1) இவ் வெற்றிடத்தில் குடம் இல்லை (பக்கவசனம்).

(2) (அது) கட்புலனாகாமையால் (ஏதுவசனம்).

(3) யாது யாது கட்புலனாவது அது அது உள்ளதாயிருக்கும்; கையகத்துள்ள நெல்லிக்கனிபோலும் (வைதன்மிய திட்டாந்தவசனம்).

(4) இது அங்ஙனமன்று (வைதன்மிய உபநயவசனம்).

(5) ஆதலின் இங்ஙனமன்று (வைதன்மிய நிகமனவசனம்).

இதன் வைதன்மியதிட்டாந்தவுறுப்புக்குப் பிறஅநுமானங்களிற் கூறுதல்போல, 'யாது யாது துணிபொருளில்லாதது, அது அது ஏதுப்பொருளில்லாதது' என்னும் வாய்பாடுபற்றி, 'யாது யாது உள்ளதோ, அது அது கட்புலனாவது' என்று வெதிரேகவியாத்திவசனங்கூறினால், உள்ளனவாயிருக்கும் பொருள்களுள் ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா முதலிய பொருள்கள் கட்புலனாகாமையால் வெதிரேகவியாத்தி இல்லை. ஆதலால் அவ்வாறாயும் முறையை ஒழித்து, இவ்வனன்னுவயானுமானத்து விபக்க திருஷ்டாந்த வியாப்திவாசகமுறை வேறாகக் கற்பிக்கப்படுகிறது; அஃதாவது: ஏதுப்பொருளில்லாத இடங்களில் துணிபொருளும் இல்லையென்று காட்டுதல்.

இவ்வனுமானத்துக்குரிய ஏதுப்பொருள் கட்புலனுகாமையாதலால் அதன் இன்மைப்பொருள் கட்புலனுதலும், துணிபொருள் இன்மைப்பொருளாதலால் அதன் இன்மைப்பொருள் உண்மைப்பொருளாதலுமாம்.

ஆகவே, 'யாது யாது கட்புலனுவது, அது அது உள்ளதாயிருப்பது' என்னும் விபக்ஷதிருஷ்டாந்தத்துக்குரிய வியாப்திவாசகம் சொல்லவேண்டுமென்று தோன்றுகின்றது.

இவ்வாறு சபக்ஷவிபக்ஷங்களுக்குரிய வியாப்திவாசகங்களை விபரீதமாகக்கூறி அனன்னுவயவியாத்தியிருப்பதாகக் காட்டினுலும், இவ்வனுமானத்துள்ள ஏது, இந்நூலுள்ளே கூறப்பட்ட ஏதுப்போலிவகையுள் விபக்கைகதேசவிருத்திசபக்கவியாபி என்னும் ஏதுப்போலியாம். இதனை, சோபாதிகம் என்னும் ஏதுப்போலியாம் என்பர் நியாயநூலார்.

திட்டாந்தங்களிரண்டும் விபரீதான்னுவயம், விபரீதவேதிரேகம் என்னும் திட்டாந்தப்போலிகளாகின்றன.

ஆயினும், இவ்வனன்னுவயானுமானத்துக்கு அவை குற்றமாகமாட்டாவென்பது இந்நூன்மரபினர்கொள்கையென்று கொள்ளக்கிடக்கிறது.

இனி, இவ்வனுமானத்தை நிரூபிக்கும் செய்யுளடிகளின் பொருள் ஆராயப்படும்.

அவ்வடிகள் வருமாறு:—

அநன்னு வயத்திற் பிரமாண மாவது
இவ்வெள் ளிடைக்கட் குடமிலை யென்றல்
செவ்விய பக்கந் தோன்று மையினெனல்
பக்க தன்ம வசன மாகும்
இன்மையிற் கண்டில முயற்கோ டென்றல்
அந்நெறிச் சபக்கம் யாதோன் றுண்டது
தோற்றர வடுக்குங் கைநெல்லி போலெனல்
ஏற்ற விபக்கத் துரையென லாகும். (எள—அச)

இதன்பொருள்: அநன்னுவயத்திற் பிரமாணமாவது என்றது அன்னுவயவியாத்தி இல்லாதபக்ஷத்தில் அநுமானம் மெய்யுணர்வுக்குக் கருவியாமாறு எங்ஙனமெனில் என்றவாறு.

அநன்னுவயத்தில் என்ற விடயசத்தமியால் அன்னுவயவியாத்தியில்லாதபக்ஷத்தில் எனப் பொருளுரைக்கப்பட்டது.

பிரகரணம்நோக்கி, பிரமாணமாவது என்னும் பயனிலைக்கேற்ற அநுமானம் என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது.

பிரமாணமாவது என்பது இசைவேறுபாட்டால் வினைக்குறிப்பாய்நிற்றலால் மெய்யுணர்விற்குக் கருவியாமாறு எங்ஙனம்? எனப் பொருளுரைக்கப்பட்டது.

[பிரமாணம் என்றது பிரமை என்னும் மெய்யுணர்வுக்குக் கரணம் என்றபடி.]

இவ்வெள்ளிடைக்கட் குடமிலை என்றது பக்கவசனம். வெள்ளிடை பக்கப்பொருள்; குடமின்மை துணிபொருள்.

வெள்ளிடை வெற்றிடம்; ஈண்டு வெண்மை, வெள்ளம் (வெறுநீர்) வெள்ளிலை (வெற்றிலை) என்பவற்றிற்போல வெறுமையுணரநின்றது; ஒருபொருளுமில்லாத வெறுநிலம் என்றபடி.

என்றல் என்றது பக்கவசனத்தின் அநுகாரக்குறிப்பு.

செவ்வியபக்கம் என்றது இப்பக்கவசனம் குற்றமுடையது என்பாரை மறுத்துக்கூறியவாறு.

குற்றமுடையதென்பார் கூறுவதாவது:— இப்பக்கவசனத்தாற் கூறப்படும் பக்கப்பொருளோ வெற்றிடமாயுள்ளது; அது கேட்போனுக்குப் பிரசித்தமாயிருப்பது; அது பிரசித்தமாய் அறியப்பட்டபொழுதே அதில் குடமின்மையாகிய துணிபொருளும் கட்புலனுய் அறியப்பட்டமையால், துணிபொருட்பெறுதி உண்டாய்விட்டது; ஆகவே துணிபொருட்பெறுதி இன்மையாகிய பக்கப்பொருளிலக்கணமின்மையால் பிரசித்தசம்பந்தம் அல்லது அப்பிரசித்தாசம்பந்தம் என்னும் பக்கப்போலியாம் என்பது.

(அதாவது துணிபொருட்பெறுதி அநுமிதியுணர்வுக்குத் தடையாதலால் அநுமிதியுணர்வுதோன்றாது என்றபடி.)

இதற்கு விடையாக, துணிபொருட்பெறுதி அநுமிதியுணர்வுக்குத் தடையாயிருப்பினும், அத்தடைக்குத் தடையாகிய துணிதல்வேட்கையுள்வழி அநுமிதியுணர்வு தோன்றுமாதலால் 'இவ்வெள்ளிடைக்கட் குடமில்லை என்று அநுமிப்பாம்' என்னும் துணிதல்வேட்கையோடு கூறும்வழிக் குற்றமாகாது என்பது குறிப்பாற்றோன்றுமாறு, "இவ்வெள் ளிடைக்கட் குடமில்லை யென்றல், செவ்விய பக்கம்" என்றார் என்க.

தோன்றாமையின் என்றது குடம் தோன்றாமையால் என்றவாறு. தோன்றாமை ஏதுப்பொருள்.

எனல் என்றது ஏதுவாசகத்தின் அநுகாரக்குறிப்பு. தோன்றாமையாகிய எதிர்மறைவினைக்குக் குடம் என்னும் எழுவாய் அதிகாரத்தால் வருவித்துரைக்கப்பட்டது.

பக்கதன்மவசனமாகும் என்றது இஃது இன்னதெனக் காட்டியவாறு. பக்கதன்மம்—ஏதுப்பொருள்; அது பக்கப்பொருளுக்கு விசேடணமாதலால் பக்கதன்மமெனப்பட்டது. வசனம், வாசகம் என்பன ஒருபொருட்சொற்கள்.

இங்ஙனம் இவ்வனுமானத்துக்குரிய பக்ஷசாத்தியசாதனங்கள் நிரூபிக்கப்பட்டன.

இனி இதன் வியாத்தியடுத்த சபக்கதிட்டாந்தவசனம் சொல்லப்படுகிறது,

இன்மையிற் கண்டில முயற்கோ டேன்றல்

என்று.

இதன் பதப்பொருள்: 'இல்பொருட்டொகுதியுட் காணப்படாதனவாகிய முயற்கோடுபோலும் என்று கூறுதல்' என்பது.

இதனுள் இன்மை என்றது இல்பொருட்டொகுதியாதலால் கருத்துநோக்கி வியாத்திவாசகமாக்கவேண்டி, 'யாது யாது இல்லது அது அது காணப்படாதது; முயற்கொம்புபோலும்' எனப் பொருளுரைக்க.

கண்டில எனச் செயப்படுபொருள் செய்ததுபோலக் கூறப்பட்டது. இது குறிப்புவினையாலணையும் பெயரெச்சமாய்க் கோட்டிற்கு அடையாயிற்று. கோடு இரண்டாதலால் பன்மையாற் கூறினர்.

முயற்கோடேன்றல் என்றது முயற்கோடுபோலுமென்று கூறுதல் என்றவாறு. முயற்கோடு என்பது முயலின்கட்கோடென விரியும். 'போலும்' என்னும் திட்டாந்த உருபு செய்யுள்விகாரத்தால் தொக்கது. இதனுற் சொல்லப்பட்ட முயற்கோடு சபக்க திட்டாந்தப்பொருள். என்றல் என்றது அவ்வசனத்தை அநுகரித்தவாறு.

அந்நெறி என்றது இவ்வனன்னுவயானுமானவாக்கியநடையில் என்றபடி; ஈண்டு அகரச்சுட்டு இகரச்சுட்டின் பொருள்படநின்றது. 'நெறி' நடையின் பரியாயமாய் ஈண்டு அநுமானவியாத்திவாக்கியநடையை உணர்த்திநின்றது.

இவ்வனன்னுவயானுமான வியாத்திவாக்கிய நடையாவது: வியாத்திவாசகங்களை ஏனையநுமானவியாத்திவாசகங்களில் மாறுபடக் கூறுதல்; அதாவது: எது எது சாதனமுள்ளதோ அது அது சாத்தியமுள்ளதெனக் கூறாது, எது எது சாத்தியப்பொருளுள்ளதோ அது அது சாதனப்பொருளுள்ளது எனச் சாதன்மிய (-சபக்க) திருட்டாந்த வியாத்திவாசகத்தை முறைபிறழக் கூறுதல்.

இந்நெறி வேண்டாது அன்னுவயானுமானத்துட்போல 'யாது யாது தோன்றாதது அது அது இல்லது' என வியாத்திவசனம் கூறில், தோன்றாததெல்லாம் இல்லதாகாது அவற்றுள்

ஒருசில ஆகாசம், காலம், திக்கு, ஆன்மா முதலிய பொருள்கள் கட்புலப்பாடின்றியே உள்ளனவாயிருத்தலால், அன்னுவயமின்றி வியாத்திவசனம் பிழைபடும் என்க. அப்பிழைபாடு நீங்கற்பொருட்டு எதுப்பொருளைப்பற்றித் துணிபொருளாராயும் அன்னுவய வியாத்திவாசகம் கூறும் முறையைக் கைவிட்டு, துணிபொருளைப் பற்றி எதுப்பொருளை ஆராயும் அனன்னுவயவியாத்திவாசக முறையே இவ்வனுமானத்தின் சபக்கதிருட்டாந்தவசனத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் கூறுவதே இவ்வனன்னுவயானுமானத்தின் சபக்க திட்டாந்தவசன உறுப்பான வியாத்திவாசகநடையென்பது தோன்ற அந்நெறி என்றார். அந்நெறி என்றது இந்நெறி என்றபடி.

சபக்கம் என்றது சபக்கதிட்டாந்தவசனம் என்பதுபட நின்றது.

இச் சபக்கதிட்டாந்தவசனத்துக்குரிய உபநய நிகமனவசனப் பொருள்களும் இச் சபக்கதிட்டாந்தவசனத்தால் பெறப்படுதலால், அவ்வுபநயநிகமனவசனங்கள் சொல்லாமல் விடப்பட்டன. இதனைப் பின்வரும் விபக்கதிட்டாந்தவசனத்துக்கும் கொள்க.

இக்கருத்தினைப் பின்,

'ஒட்டிய வுபநய நிகமன மிரண்டுந்
திட்டாந் தத்தி லேசென் றடங்கும்' (க0கூ-கக0)

என்று இந்நூலாசிரியர்தாமே கூறுதலால் அறியலாம்.

யாதோன் றுண்டது தோற்றர வடுக்கும் என்றது இவ்வனன்னுவயானுமானத்துக்குரிய வைதன்மியதிட்டாந்தவியாப்திவாசகம் கூறியவாறு.

'யாதொன்று உண்டு அது தோற்றரவடுக்கும்' என்றாராயினும் பொருட்பொருத்தம்நோக்கி, 'யாதொன்று தோற்றரவடுக்கும், அது உண்டு' எனக் கொண்டுகூட்டிப் பொருளுரைத்துக்கொள்க.

இதன்பொருள்: 'யாது யாது கட்புலப்படுவதோ அது அது உள்ளதாயிருக்கும்' என்பதாம். இது வியாப்திவாசகமானமையால் எஞ்சாமைப்பொருள்தோன்றுமாறு வினவையும் சுட்டையும் அடுக்காக்கி உரைவரையப்பட்டது.

தோற்றரவு–கட்புலனாதல். அடுத்தல் - பொருந்துதல். கட்புலனாதலைப் பொருந்துதலாவது. கட்புலப்படுதல் என்றபடி.

இங்ஙனங் கொண்டுகூட்டாது, 'எது எது உள்ளதோ, அது அது கட்புலனும்' எனக் கிடக்கைமுறையே பொருள்கொள்ளின், உள்ளனவாகிய காற்று ஆகாயம் காலம் திக்கு முதலிய பொருள்கள் கட்புலனாகாமையால் வியாப்திவசனம் பிழைபடுவதாம்; அங்ஙனம் பிழைபாடுவாராமைப்பொருட்டுக் கொண்டுகூட்டி உரைவரையப் பட்டது.

அன்றியும், அன்னுவயானுமானத்தினின்றும் மாறுபடுமாறு "இன்மையிற் கண்டில முயற்கோடு" என்று இதன் சாதன்மியதிருஷ் டாந்தவியாப்தியைத் துணிபொருளுள்ளவிடத்தில் ஏதுப்பொரு ளுள்ளதாக மாறிக்கூறினமையால் அதனின் மாறுபட்ட இவ் வைதன்மியதிருஷ்டாந்தவியாப்தியும் ஏதுப்பொருளில்லாதவிடத் தில் துணிபொருளும் இல்லை என்பதுதோன்றக்கூறுதலே முறை யாகின்றது.

அன்றியும், கிடக்கைமுறையே 'யாதொன்று உள்ளது அது கட்புலனாகும்' என்று கூறின், இவ்வன்னுவயானுமானத்துக்கு ஏற்ற விபக்ஷதிருஷ்டாந்தவியாப்திவாசகமாகாது, இதனின் மாறு பட்ட அன்னுவயானுமானத்துக்கு உரிய வைதன்மிய (விபக்ஷ) திருஷ்டாந்தவியாப்திவாசகமாய்ப் பிழைபடும் என்க.

கைநெல்லிபோல் எனல் என்றது இதன் வைதன்மிய திருஷ்டாந்தவாசகம். கைநெல்லி - வைதன்மியதிருஷ்டாந்தப் பொருள். கையகத்துள்ள நெல்லிக்கனி என்பது கருத்து. போல்

என்றது கைநெல்லி திருஷ்டாந்தப்பொருள் என்னும் குறிப்புணர நின்றது. எனல் என்றது அநுகாரக்குறிப்பு.

ஏற்றவிபக்கத்துரையெனலாகும் என்றது ஏனை அநுமானத்தின் வைதன்மியதிருஷ்டாந்தவியாப்திவாசகத்தினின்றும் இவ்வனன்னுவயானுமானத்தின் வைதன்மிய (விபக்க) திருஷ்டாந்த வியாப்தி வாசகம் மாறுபடக்கூறுவது குற்றமாகாது பொருத்தமுள்ளதேயாம் என்னும் குறிப்புணரநின்றது.

இதனால் இவ்வாறு வியாப்திவாசகம் சொல்லலாகாதென்பாரை மறுத்துக்கூறியவாறாயிற்று.

இங்ஙனம் அநுமானவகைகள் ஒருவாறு நிரூபிக்கப்பட்டன. இனி இதன் முடிப்புரை கூறப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கசo-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இலங்கையிலே சீதையைக் கண்டேனில்லை;

இற்பிறப்பும் பொறுமையும் கற்பும் நடிக்கக்கண்டே னெனல்.

140. 'விற்பெருந் தடந்தோள் வீர, வீங்குநீ ரிலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டே னல்லேன்;
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.'

இ-ள். 'வீர (திவீரனே, என்ன ஆச்சரியம்! காணக்கூடிய ஓர் உருவப்பொருளைத் தேடிச்சென்ற அடியேன், அதனைக் காணாமல், அதன்தானத்தில், காணக்கூடாத மூன்று அருவப்பொருள்களைக் கண்டேன். அந்த விவரத்தைக் கேட்டருள்.) இலங்கையிலே (அடியேன் தேடிச்சென்ற) சீதாதேவியைக் கண்டேனில்லை. (வேறு கண்டது யாதோவெனில்,) உயர்குடிப்பிறப்பென்பதொரு குணமும் மகத்தான பொறுமையென்பதொரு குணமும் கற்பு என்னும் பெயரினையுடையதொரு குணமும் ஆனந்தநர்த்தனஞ் செய்துகொண்டிருத்தலைக் கண்டேன்' (என்பது, இற்பிறப்புமுதலிய மூன்றுகுணங்களின் சொரூபமாயுள்ளாள் சீதை யென்றவாறு.)

பெரும் வில் தடம் தோள் வீர - பெரிய வில்லையேந்திய விசாலமான கையையுடைய வீரனே. வெற்பு வீங்கு நீர் இலங்கையில் - திரிகூடமலைமேலுள்ள, மிகுந்த நீரையுடைய கடல்சூழ்ந்த இலங்கை நகரில். இற்பிறப்பு-உயர்குடிப்பிறப்பு. இருமை-பெருமை. பொறை-பொறுமை. களிநடம்புரிதல் - களிப்போடு கூத்தாடல். இலங்கை வெற்பில் என்பது வெற்பிலங்கையில் என மாற்றியும் உருபுபிரித்துக்கூட்டியும் உரைக்கப்பட்டது.

சிங்காதனத்திலே அரசனும் அரசியும் அரசிளங்குழவியும் ஒருங்கு விளங்கக்கண்டு, அந்தக் கம்பீரமான காட்சியில் முழு மனமும் முழுகிய ஒருவன் சிங்காதனத்தைக் காணுனன்றே; அவ்வாறே, சீதையினிடத்தே குடிப்பிறப்பும் பொறுமையும் கற்பும் ஆகிய முக்குணங்கள் மூர்த்தன்னியமாய் முனைந்துநின்று முற்பட்டுத்தோன்றிச் சொலிக்கக்கண்டு அந்தக் காட்சியில் மனம் அழுந்தி அவசனுன அனுமான், அந்தச்சமயத்தில் அக்குணங்களைக் கண்டதன்றி, அவைகளையுடைய அவளைக் காணவில்லையென்பது கருத்து.

இயல்பாக வடிவமும் தொழிலு மில்லாத, கட்புலனுகாத இற்பிறப்பு முதலிய குணங்களின் சிறப்பு இனிது புலப்பட,

'இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்'

என, அவைகளைக் காணப்படும் உருவமும் செயலுமுடையனவாகக் கூறிய அதிசய கவிசாதுரியம் பாராட்டத்தக்கது.

சீதை இராமனைப் பிரிந்தாளென்பது பொருந்தாதெனல்.

141 'கண்ணினும் உளை நீ! தையல் கருத்தினும் உளை நீ! வாயின்
எண்ணினும் உளை நீ! கொங்கை இணைக்குவை தன்னின் ஓவா
தண்ணல்வெங் காமன் எய்த அலரம்பு தொளைத்த ஆறாப்
புண்ணினும் உளை நீ! நின்னைப் பிரிந்தமை பொருந்திற் றாமோ!'

இ-ள். '(நீ, எப்போதும்) சீதாதேவியின் கண்களிலிருக்கின்றாய்! கருத்திலுமிருக்கின்றாய்! மன்மதன் எய்த புட்பபாணங்கள் தொளைத்ததனாலுண்டான ஆறாத புண்களிலு மிருக்கின்றாய்! (இப்படியிருக்கவேயும்,) உன்னை அவள் பிரிந்திருக்கின்றாளென்று கூறுவது பொருத்தமான கூற்றாமோ?'

உளை - உள்ளாய். எண் - எல்லை. வாயின் எண்ணில் - வாயின் எல்லையில் - வாயில். இணை - இரட்டை. குவை - மேடு - முகடு. ஓவாது - நீங்காமல் - இடைவிடாமல். அண்ணல் - பெருமை.

வெம்மை - கொடுமை. அண்ணல் வெம்காமன் - பெருங்கொடுமை யுடைய மன்மதன். அலர் - பூ. தொளைத்த புண் - தொளைத்தத ஞல் உண்டாகிய புண்.

சீதை, எப்போதும் இராமனை உருவெளித்தோற்றமாகக் காணலால் அவன் அவள்கண்ணைவிட்டுப் பிரியாமையையும் அவனை அவள் சதா சிந்தித்துக்கொண்டிருத்தலால் சிந்தையைவிட்டுப் பிரியாமையையும் இடைவிடாமல் அவன்பெயரைச் சொல்லிக்கொண் டிருத்தலால் வாயைவிட்டுப் பிரியாமையையும் ஓயாது அவன் காதல்கூர்தலால் மன்மதன் அம்புசெய்த புண்ணைவிட்டுப் பிரியாமையையும் உடையாளென்பது உள்ளுறைபொருள்.

இதற்கு முந்தியபாட்டில், காணக்கூடாத குணங்கள் காணப் பட்டனவாகக்கூறியது அதிசயமானது. அந்த அதிசயத்துக்கு மேல் அதிசயமானது, இந்தப்பாட்டில் இராமனைப் பிரிந்த சீதை யைப் பிரியாதவனென்றது. மேற்கொண்டும் அதிசயமானது, பிரிந்த தூலராமர் ஒருவராயிருக்க, வாயில்உள்ள ராமர் மனத்தில்உள்ள ராமர் கண்ணில்உள்ள ராமர் புண்ணில்உள்ள ராமராகச் சூக்கும ராமர் பலராயிருப்பதாகக் கூறியது.

## சீதை இராவணனல் தீண்டப்படாமல் தூயளாயிருக்கின்ற ளெனல்.

[இலங்கைநகரிலே, ஒருபுறத்திலே, அசோகவனமென்ற சோலையிலே, இளையபெருமாள் இயற்றிய சாலையிலே, 'தவம் செய்த தவமாம் தையல்'* ஆன சீதாதேவி உனது திருநாமத்தையே செபித்து உனது திருவுருவத்தையே தியானித்து அருந்தவம் புரிந்துகொண்டிருக்கக்கண்டேன். அவளுடைய கற்புத்தீயும் 'இரா வணன், விரும்பாதவளைத் தொட்டால், தலைவெடித்துச் சாவக் கடவன்' என்று பிரமனிட்டிருந்த சாபத்தீயும் அகத்திக்கோட்டை யும் புறத்திக்கோட்டையுமாய்த் தடையாயிருந்ததனல், அவளைத் தொடுதற்கு அஞ்சி அவளிருந்த சாலையோடு தூக்கிப்போனன்.]

---

* மகாத்துமாக்களாற் செய்யப்படும் மகிமையுடைய தவம் தானே தவஞ்செய்து அத்தத் தவப்பயனைகப்பெற்ற சீதை - தவத்தின் தவப்பயன் வடிவெடுத்தாற்போன்றவள்.

சீதை கற்புநிலைகலங்காமை மாதர்களுக்கெல்லாருக்கும் உயர்ந்த மதிப்பை உண்டாக்கிய தெனல்.

142 'சோகத்தா ளாய நங்கை கற்பினால், தொழுதற் கொத்த
மாகத்தார் தேவி மாரும் வான்சிறப் புற்றார்; மற்றைப்
பாகத்தாள், இப்போ தீசன் மகுடத்தாள்; பதுமத் தாளும்
ஆகத்தா ளல்லள், மாயன் ஆயிரம் மௌலி மேலாள்.'

இ-ள். '(உனது பிரிவினால்) துன்பமுடையவளான சீதா பிராட்டி கற்புநிலை (கடுஞ்சோதனைக்குள்ளானகாலத்தும்) கலங்காமையினால் (அவள் உயர்வுற்றாளென்பானேன், 'தக்கவன் ஒருவன் வாழத் தன்குலமெல்லாம் வாழும்' என்றவாறு, பெண்ணாகிய அவளினமான பெண்களெல்லாருமே உயர்வுபெற்றார்கள். அப்படி உயர்வுபெற்ற பெண்கள் பூலோகத்துப்பெண்கள்மட்டுமோவென்னில், அன்று) தேவலோகத்துத் தெய்வப்பெண்களும் உயர்வடைந்தார்கள். (ஏனைய எல்லா உலகத்துப்பெண்களும் உயர்ந்தார்கள். பிராட்டியொருத்தியுடைய கற்பினால், பெண்களெல்லாரும் அடைந்த மேம்பாட்டைக் கொண்டாடுவாராய், ஆடவரெல்லாம், அவரவர் நாயகிமாரைத் தலைமேற்கொண்டு கௌரவப்படுத்தினர்கள். சீதாதேவி கற்புச்சோதனைக்குள்ளாகுமுன்) சிவபிரானுடைய பாகத்தாளாயிருந்த உமாதேவி, இப்போது (சோதனைக்குள்ளான சீதாதேவி கற்பு நிலைகலங்காமை தெரியலானபோது) அந்தப் பெருமானுடைய தலைமேலுள்ளாள். இலக்குமிதேவியும் திருமால் மார்பிலுறைபவளல்லளாய் அந்த அமலன்சிரமே லிருக்கின்றாள்.'

சோகம் - துக்கம். மாகம் - தேவலோகம். பதுமத்தாள் - இலக்குமி. மகுடம் - மௌலி. முடி - கிரீடம். மௌலியாளேயும் பாடம்.

'அர்த்தநாரீசுவரமூர்த்தத்திலே சிவபிரானது பாகம் வலப்புறமாதலால், இடப்புறம் "மற்றைப்பாகம்" எனப்பட்டது. "ஆயிர மௌலி" என்றது - விராட்ஸ்வரூபத்தின் நிலைமையைக் கருதி.' வை. மு. கோ.

சீதை ஒருத்தியின் கற்பினால் மாதர்களெல்லாருக்கும் மதிப்பு அதிகப்பட, ஆடவர் மாதரை முன்னிலும் அதிகமாகக் கவுரவப் படுத்தினார்களென்பதைப் பாவனாரீதியான கவிமுறையாக, ஆச்சரியமும் ஆனந்தமுமுண்டாக,

'பாகத்தாள் இப்போ தீசன் மகுடத்தாள் பதுமத் தாளும்
ஆகத்தா ளல்லள் மாயன் ஆயிர மௌலி மேலாள்'

என்று கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

சீதையின் மேம்பாடு, 'உன்பெரும்,' 'பொன்னல,' 'உன்குலம்,' 'சோகத்தாள்' என்ற கவிகளில் ஆரோகணகதியாக உயர்தலுடன் பரவுதலும் உடையதாகக் கூறப்பட்டு அக்கவிகளிற் கடைசியான இந்தச் சோகத்தாள் என்ற பாட்டில் அத்தியந்த உச்சமும் வியாபகமும் அடைந்ததாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

## அனுமான் சீதையை அசோகவனத்திற் கண்டே னெனல்.

[தெண்ணீர்க்கடலின் நடுவே இலங்கையைக் கண்ட அடியேன், அங்கே சாதாரணமாகச் சனசஞ்சாரமுள்ள எல்லா இடங்களிலும் விசேடமாக இராவணன் அரண்மனையிலும் தேவியைத் தேடிக் காணாமல் அசோகவனத்தை அடைந்தேன்; அங்கே கண்ணீர்க் கடலின் நடுவே அவளைக் கண்டேன்.]

## இரக்கமே பெண்ணுருக்கொண்டாற்போன்று சீதை சிறையிலிருக்கின்றா ளெனல்.

143 'அரக்கியர் அளவற் றார்கள், அலகையின் குழுவும் அஞ்ச
நெருக்கினர் காப்ப, நின்பால் நேசமே அச்சம் நீக்க,
இரக்கமென் றொன்று தானே எந்திழை வடிவ மாகித்
தருக்குயர் சிறையுற் றன்ன தகைமையள், தமியள் அம்மா!'

இ-ள். '(தாம் பயப்படாது பிறரைப் பயப்படுத்துமியல்புடைய பேய்கள், ஒன்றன்று, அனேகம் திரண்டுகூடியனவான பல) பேய்க்கூட்டங்களுமே பயப்படும்படி (இமிசிக்கும்) அரக்கியர் (ஒருவரல்ல) அளவற்றவர்கள் (தப்பிப்போதற்குச் சந்துவிடாது நெருங்கிச் சூழ்ந்துநின்று) வருத்தஞ்செய்துகொண்டு காவல் காத்துநிற்க, (அவ்வருத்தத்தால் ஏற்பட்ட) அச்சத்தை உன்பால் வைத்த அன்பு ஒன்றே (பக்கபலமில்லாமல்) நீக்காநிற்க, (அந்த அன்புத்துணையன்றி எந்தத்துணையு மில்லாது) தனியளாயுள்ள

சீதாதேவி, இரங்கிப்பரிதாபப்படத்தக்கதென்ற ஒருதன்மையானது ('பெண்ணொன்றால் பேயுமிரங்கும்' என்பதற்கிலக்கான) பெண்ணுருக் கொண்டு சிறையி லிருந்தாற்போன்ற தன்மையளாயிருக்கின்றாள்.'

அலகை - பேய். குழு - கூட்டம். நெருக்குதல் - வருத்துதல் (தமிழகராதி). நெருக்கினர் (முற்றெச்சம்) - நெருக்கி - வருத்தி. ஏந்திழை - பெண். தருக்கு (முதனிலைத்தொழிற்பெயர்) - தருக்கு தல் - வருத்துதல் (தமிழகராதி). தருக்கு உயர் - வருத்துதல் மிகுந்த. சிறை - சிறைச்சாலை - காவற்கூடம். தகைமை - தன்மை. தமி - தனி. அம்மா, அதிசய இரக்கக்குறிப்பு.

பேய், பிறரைப் பயமுறுத்தும்; தான் பயமுறாது. அப்படிப் பட்ட பேய் தனியாகவன்றிக் கூட்டங்களாகவுள்ளவைகளும் அஞ்சும்படி, எனவே அதி அசாதாரண அச்சமுண்டாம்படி, அரக்கிகள் சீதையை வருந்தச்செய்தார்களென்பான் 'அலகையின் குழுவும் அஞ்ச நெருக்கினர்' என்றான். அப்படிப்பட்ட வருத்தப் படுத்துதலைப் பொருட்படுத்தாதபடிசெய்தது சீதை இராமன்பால் வைத்த நேசமென்றதனால், சீதையின் இராமநேசத்தை, அன்பென் பதை அறியாரும் அறியச்செய்தான்.

இரக்கமென் றொன்று தானோர் ஏந்திழை வடிவமாகித்
தருக்குயர் சிறையுற் றன்ன தகைமையள் தமியள் அம்மா!

என்ற இனிய அருமந்த இரக்கவருணனை, சீதையின் அதிபரிதாப கரமான நிலைமையை நன்குணரச்செய்து, கருங்கல்மனமுங் கரைந் துருகச்செய்வதா யுள்ளது. அது கருணைசொரூபியான இராமன் மனத்தை யாதுசெய்திருக்கு மென்பது பகரமுடியாததன்றிப் பாவிக்கவும் முடியாததா யுள்ளது.

இராமனைக்காட்டிலும் பாக்கியசாலியான ஆடவரில்லை யெனல்.

[எப்படிப்பட்ட பெருந்துன்பத்தையும் அச்சத்தையும் பொருட்படுத்தாதபடி செய்யவல்ல சிறந்த அன்பைச் சீதாதேவி உன்பால் வைத்திருக்கின்றாள். அப்படிப்பட்ட அன்பைத் தம் மனைவியரால் வைக்கப்பெற்றவர் எவரும் இலர்: ஆதலால், நீ ஆடவரனைவரினுஞ் சிறப்புடையையாய், அவரெவரும் அனுபவி யாத, ஆணாகப்பிறந்ததன்பயனாக அனுபவிக்கும் செல்வங்களுட் சிறந்த செல்வத்தை அனுபவிப்பாயாயிருக்கின்றா யென்பதைத் தேவியைக் கண்டபோது தெரியலானேன்.

### இராவணன் இணங்கும்படி இரந்துவேண்டச் சீதை கடிந்து மறுத்தா ளெனல்.

அடியேன் தேவியை அணுகித் தெரிசித்துச் சேவைசெய்தற்கு ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருந்தபோது, இராவணன் வந்து இறைஞ்சி இணங்கும்படி இரந்து வேண்ட, அவள் கொடுங்கோபங் கொண்டு கடுஞ்சொற்கூறி மறுக்க, அவன் அவளைக் கொல்லத் தொடங்கிவிட்டான். அப்போது, அவள் தூயகற்பும் உன்திரு வருளும் நல்லறமும் ஒன்றாகூடிக் காத்தன. அவன் அவளைத் தனக்கு இணக்கும்படி காவல்காத்துநின்ற இராட்சசிகளுக்குக் கட்டளையிட்டுச் சென்றான். அவர்கள் என் மந்திரவலியால் இறந்து போனார்போல உறங்குவாரானார்கள்.

### சீவனைவிடப்போன சீதையை இராமநாமம் இயம்பிக் காத்ததும் மோதிரங் காட்டியதும் கூறல்.

அப்போது பிராட்டி உயிரைவிட ஒருப்பட்டு ஒரு கொடியைக் கழுத்தில் இறுக மாட்டக் கண்டு, அடியேன் பதறிப் பக்கத்திலே போய்க் கையாற் றடுக்கமாட்டாது வாயாற்றடுப்பேனாய் உன் திரு நாமத்தை உச்சரித்தபோது, *குரக்குருக்கொண்ட அரக்கனோ வென்று ஐயுற்றாளானாலும், 'யான் இறக்கலுற்றபோது எம்பெரு மான்பேரைக் கூறி இறவாது காத்தாய்' என்று நன்றியுரைத்தாள். அடியேன், உன் செய்திகளைத் தெரிவித்து உன் மோதிரத்தைக் காட்டினேன். அது, அவளுக்கு அந்தியகாலத்தில் சாவாது காக்கும் தேவாமுதம்போன்றது.]

### எதிரிடையான இரண்டு அதிசயசம்பவங்கள் நிகழ்ந்தனவேனல்.

144 'ஒருகணத் திரண்டு கண்டேன் ஒளிமணி ஆழி ஆன்ற
திருமுலைத்தடத்து வைத்தாள்: வைத்தலும்,செல்வ! நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னல்வெந்
துருகிய துடனே ஆறி வலித்தது குளிர்ப்புள் ளூற.'

இ-ள். 'சீமானே! ஒரு கணநேரத்துக்குள்ளே (ஒன்றுக்கொன் றெதிரிடையான) இரண்டு (வியப்பான நிகழ்ச்சிகளைக்) கண்டேன். (அவை எவையெனில், தேவி, உனது பொன்) மோதிரத்தை (உன் அன்பு தூண்டத் தன்) தனமுகட்டிலே வைத்தாள்: வைத்தவுடனே (உன் பிரிவுத்தீயாகிய) விரகாக்கினி (யினால் வெதுப்பப்பட்டிருந்த

* குரக்குரு–குரங்கின் வடிவம்.

அவள் திருமேனிவெம்மை) யினல் (அந்த மோதிரம்) வெதும்பி உருகியது: உடனே (அம்மோதிரத்தை அனுப்பிய நீ "விரைவாய் வந்து சிறைமீட்பாய், திரும்ப உன்னைச் சேரலாம்" என்ற சந்தோஷ சிந்தனையினல்) மனத்திலே குளிர்ச்சி உண்டாக (அது கொங்கை யுள்பட்ட உடம்பெங்கும் பரவிக் கொங்கைமீது வைக்கப்பட் டிருந்த மோதிரத்தையுங் குளிர்விக்க, அது) சூடாறி யிறுகிக் கட்டி யானது (ஆச்சரியம்! ஆச்சரியம்!! மிகவும் ஆச்சரியம்!!!).

மணி (-அழகுடைய) ஆழி (-மோதிரம்). ஆன்ற - அகன்ற - பரந்த. தடம் - உயர்ந்த இடம் (திருக்கோ. ச. சங்க அகராதி) - முகடு. விரகம் - பிரிவு. வலித்தல் - வன்மையாதல். ஊறல் - பெருகல் (தமிழகராதி). உள் (மனம்) குளிர்ப்பு ஊற என மாறுக. ஆழி ஊன்ற பாடபேதம்.

இராமன்பிரிவுநீட்சிபற்றிய சிந்தனையால் வெதும்பியிருந்த சீதைதேகம் அவனைத் திரும்பச் சேரலாமென்ற எண்ணத்தாற் குளிர்ச்சியடைந்ததென்பது கருத்து. இதனை அதிசயமும் ஆனந்த மும் உண்டாக உணர்த்துவானாய், இராமன்மோதிரம் முந்திய வெப்பத்தால் உருகிப் பிந்திய தட்பத்தால்* இறுகியதென்றான். இது உயர்வுநவிற்சியணி. இதுபோலக் 'காதளவும் நீண்ட கண்' எனத் தமிழிலும், 'இருகாதுக்கும் எட்ட இளித்தான்'† என ஆங்கி லத்திலும், 'பிணமலை' 'இரத்தஆறு' என ஆங்கிலம் தமிழ் இரண்டி லும் வழங்குவன உயர்வுநவிற்சிக்கு உதாரணங்களாம்.

தேகத்தில் பொன் உருகும்படியான சூடு உண்டாகுதல் இயல்பன்று. மோதிரம் (பொன்,) உருகியபோது மோதிரவடிவத்தை யிழந்துவிடும்: பின்பு அது, குளிர்ந்து கட்டியாகும்போது பழைய மோதிர உருவத்தை அடையமாட்டாது. இவற்றுக் கெதிரிடை யாக, மோதிரம் உடற்சூட்டினல் உருகியதென்றும், அப்படி உருகிய மோதிரம் உடற்குளிர்ச்சியால் இறுகியதென்றும் உரைத் தல் பொருத்தமன்றென்று கருதலாகாது. யாதாயினுமொன்றை இன்பமும் அதிசயமும் உண்டாக மிகைப்படுத்துக்கூறுவதே அதி சயோக்தியலங்காரமென்னும் உயர்வுநவிற்சியணியாம். இப்பாட்டி லுள்ள உயர்வுநவிற்சி, அதி அசாதாரண அற்புத கற்பனைசக்தி

---

* தட்பம்—குளிர்ச்சி. † கடைவாய்கள் காதுகளை அணுகவும் பற்கள் மிகவும் வெளிப்படவும் மூட்சிரிப்புச் சிரித்தான் ('He grinned from ear to ear').

யுடையாராலேயே கூறக்கூடியது. இந்த உயர்வுநவிற்சிக்கவி, மராமரப்படலத்தில் வரும் 'ஊழிபேரினும்' என்ற முதற்கவிதொடக்கமாக 'ஏழு மாமரம்' என்ற கவி இறுதியாகத் தொடர்ச்சியாகப் பரமாச்சரியமும் பரமானந்தமும் பயக்கும் பதினூன்கு உயர்வுநவிற்சிக்கவிகளையும் கலிங்கத்துப்பரணியில் உள்ள 'அணைகண்ட' என்ற அருமந்த அதிசய உயர்வுநவிற்சிக்கவியையும் நினைவுறச்செய்கின்றது.

'கடலில் திருவணைகட்டிய (இராமன் சேனையைச்சேர்ந்த) குரங்குக்கூட்டங்கள் (அந்தப் பாலைவனத்தில் அதி உட்டிணமான மணற்பரப்பிலுள்ள எண்ணிறந்த மணல்களுள்) ஒருமணல் (காணப்பெற்றிருக்குமானால், அதைக் கடலிற்போட்டுக்கடல்நீர் முழுவதையும் வற்றச்செய்து கடலைக் கடக்க அணைகட்டவேண்டிய வேலையை அனுவசியகமானதாகச் செய்திருக்கும். அந்த ஒருமணல்) காணுமையால் (கடலில் அணைகட்டுதற்கு) மலைகளையெடுத்து(க்கொண்டுவந்துபோட்டு வருந்தி) மயங்குவனவாயின' என்ற பொருளடங்கிய அந்தப்பாட்டு வருமாறு:

'அணைகண்ட குரங்கினங்கள் அலைகடலுக் கப்பாலை
மணலொன்று காணுமல் வரையெடுத்து மயங்கினவே.'

உண்மையில், கடலைச் சுவறச்செய்யும் சூட்டுமணல் உள்ளதன்று, உள்ளதாயினும் தொடக்கூடியதா யிராதென்றும், தேகச்சூட்டினுல் மோதிரம் உருகாது, உருகி உருவழிந்த மோதிரப்பொன் சூடாறியபோது (கம்மியன் கைத்தொழிலாலன்றி) மோதிரமாகாதென்றும் ஆட்சேபிப்போர், கவிஞர்கள் மனேபாவனையாற் சிருட்டிக்கும் கற்பனுலோகக்காட்சிகளைக் காண மறுப்போராவார்.

சீதை, ஒருமாதத்துக்குட் சிறைமீட்கப்படாவிட்டால்
சேத்திடுவே னென்றுரை ளனல்.

[அடியேன் உன் திருநாமம் தீட்டிய கணையாழியைக் காட்டியபோது கையில் வாங்கி, அநியாயம்மிகுந்த அரக்கரிருக்கும் ஊருக்கு வந்து *ஆசூசமடைந்ததென்று ஆயிரங்கலசம் புண்ணியதீர்த்தத்தினுல் அபிடேகஞ்செய்வாள்போல, அதனை எம்பெருமாட்டி ஆனந்தக்கண்ணீரால் முழுக்காட்டினுள். மகிழ்ச்சியமுகை அழுதுகொண்டு வாய்பேசாமல் மௌனமாயிருந்தாள். மெலிந்திருந்த

---

* ஆசூசமடைந்தது—தீட்டுப்பட்டது.

மேனி விம்முதலுற்றாள். ஆச்சரியத்தால் மூச்சடங்க, ஆவிபோனாள் போன்றிருந்தாள். அப்போது, அடியேன் அவள் பிரிந்த பின்பு நிகழ்ந்தவைகளையும் உன் துயரையும் உரைத்து, அவளிருக்குமிடம் அறியப்படாததனால் நீண்ட காலதாமதம் நேர்ந்ததென்று கூறக்கேட்டபின் நெடுமூச்சுவிடுவாளாய்ப் போன உயிர் மீளவந்தாள் போன்றாள். உன்னைப் பிரிந்தபின் தனக்கு நேர்ந்த ஆபத்தையும் துன்பத்தையும் அறிவித்தாள். முடிவில் 'இன்னும் ஒருமாதம் உயிரோடிருப்பேன். அதற்குள் எம்பெருமான் இன்னருள்புரியானெனில் இறந்திடுவேன்' என்று கூறித் தன் திருமுடியில் உன் திருவடிகள் பொருந்தத் தியானித்துத் திக்குநோக்கித் தெண்டனிட்டாள்.

## இராமன்கையிற் சூளாமணியைக் கொடுத்தல்.

'பின்பு, தன் முன்தானையில் முடிந்துவைத்திருந்த சூளாமணியை அவிழ்த்தெடுத்து அடையாளமாக அடியேன்கையிற் கொடுத்தாள். அதனைக் கண்களிக்கக் காண்பாயாக' என்று கூறி அனுமான் சூளாமணியை இராமன்கையிற் கொடுத்தான்.]

## சூளாமணியை வாங்கிய இராமன் மெய்ப்பாடுகள்

145 பையஉட் பயந்த காமம் பரிணமித் துயர்ந்து பொங்கி
மெய்யுற வெதும்பி யுள்ள மெலிவுறு நிலையை விட்டான்
ஐயனுக் கங்கி முன்னர் அங்கையாற் பற்றும் நங்கை
கையென லாயிற் றன்றே, கைபுக்க மணியின் காட்சி.

இ - ள். (சீதையின் சூளாமணி இராமன்கையி லுற்றபோது அதன் காட்சியாலும் பரிசத்தாலும் அவன்) நெஞ்சினுள்ளே மெள்ள உண்டாகிய சீதைகாதல் வளர்ந்து மேன்மேலோங்கியதனால் உடம்பு வெதும்பி மெலிவுற்றிருந்த நிலைமை நீங்கப்பெற்றான். அவன்கையை அடைந்த சூளாமணி அவனுக்குக்(கல்யாணகாலத்தில்) அக்கினி முன்னிலையில் அவன்கையாற்பற்றிய சீதைகைபோல (இன்பம் அளிப்பது) ஆயினது.

பைய - மெல்ல. பயத்தல் - உண்டாகுதல் (தமிழகராதி). பரிணமித்தல் - (வித்திலிருந்து மரம் உண்டாதல்போல) வளர்தல். மெய் - உடம்பு. அங்கி - அக்கினி. கை எனல் ஆயிற்று - கைபோலுதலானது - கைபோன்றது. குலமுறைகிளத்துபடலத்தில்

'வில்லென்னும்' என்ற பாட்டில் 'அல்லென்னும் திருநிறத்த அரி' என்பதில் 'என்னும்' என்பது 'போலும்' என்று பொருள்பட நிற்றல் காண்க. அன்று ஏ அசைகள். காட்சி - தன்மை (தமிழக ராதி). பைப்பய பாடபேதம்.

முன் சீதையை மிதிலையிலே கன்னிமாடத்திலே கண்டு காதல் கொண்டு வருந்தியிருந்த இராமன் விவாககாலத்தில் அவள் கையைப் பற்றியபோது அவளை அடைந்தோமென்று மகிழ்ச்சியுற்றதுபோல, இப்போது அவள்பிரிவால் வருந்தும் அவன் அவளுடைய சூளாமணியைக் கையிற்கொண்டபோது 'இராவணனை விரைந்து வென்று இச் சூளாமணிக்குடையாளை மீட்டு அடைந்திடுவோம்' என்று களிப்படைந்தானென்பது ஈற்றடியிரண்டின் கருத்து.

146 பொடித்தன உரோமம்; மேன்மேற் பொழிந்தன கண்ணீர்; பொங்கித்
துடித்தன மார்பும் தோளும்; தோன்றின வியர்வின் துள்ளி;
மடித்தது மணிவாய்; ஆவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி: என்னே! ஆருளர் தன்மை தேர்வார்!

இ - ள். (அந்தச் சூளாமணியின் பரிசம் அதனை அணிந்திருந்த சீதையின் பரிசம்போன்றிருந்ததனால், இராமனுக்கு) உரோமம் சிலிர்த்தது; (ஆனந்தக்) கண்ணீர் மேன்மேலாகப் பொங்கி வழிந்தது; தோளும் மார்பும் துடித்தன; (இன்ப) வேர்வைத் துளிகள் (இனிது) வெளிப்பட்டன; வாய் மடித்தலுற்றது; (ஆனந்த மேலீட்டால்) உயிர் (வெளியே) போவதும் (உள்ளே) வருவதுமாகி உடம்பு பூரித்தது: என்ன ஆச்சரியம்! இத்தன்மைகளை ஆராய்ந்தறியவல்லார் யார் இருக்கின்றனர்? (எவருமில்லையென்றபடி).

பொடித்தல் - புளகித்தல் - சிலிர்த்தல். வியர்வு - வேர்வை. துள்ளி - துளி. மணி (-அழகு)வாய் - அழகியவாய். ஆவி - உயிர்.

சீதையினது சூளாமணியின்பரிசம் அவள் தேகப்பரிசமே போல, இராமனுக்குண்டாக்கிய மெய்ப்பாடுகளை வியப்புவிளைய விவரித்திருக்கும் வித்துவசாதுரியம் மெச்சத்தக்கது. அத்தியந்த சந்தோஷத்தாலும் சிலர் இறக்கும் உண்மையை மனத்துட்கொண்டு ஆவி அகன்றிடலாம்படியான பேரானந்தத்தை இராமன் அடைந்தான் என்பார் 'ஆவி வருவது போவதாகி'யென்றார்.

## இராமன் சேனையுடன் தென்கடற்கரை சேர்தல்.

[அப்போது அங்கதனுதியர் வந்து இராமசுக்கிரீவரை வணங்கினார்கள். சுக்கிரீவன் இராமனைநோக்கித் 'தேவியைத் தேடச்சென்றிருந்த சேனைகளெல்லாம் திரும்பிவந்துவிட்டன. அவளிருக்குமிடத்தை அறிந்துகொண்டோம். இனி வீணே காலஞ்செல்லவிடலாமோ?' என்றவுடனே, இராமன் எழுந்து 'நமது படைகள் புறப்படுக' என்றான். சேனைகளெல்லாம் திரண்டு தெற்குநோக்கிச் செல்வனவாயின. அப்போது இராமலக்குமணரை முறையே அநுமானும் அங்கதனும் வணங்கி வேண்டிக்கொண்டபடி முந்திய முன்னவன் பிந்திய முன்னவன்மீதும், முந்திய பின்னவன் பிந்திய பின்னவன்மீதும் ஏறிக் கருடாரூடனான திருமாலும் இடபாரூடனான சிவபிரானும்போலச் செல்வாரானார். தேனும் பழங்களும் கிழங்குகளும் கிடைக்கும் மலைப்பிரதேசமார்க்கமாகச் சேனை சென்றது. இலங்கையையும் இராக்கதரையும் பற்றிய எல்லா விவரங்களையும் அநுமான் சொல்லிக்கொண்டு செல்ல, எளிதாக வழிகடந்து எல்லாரும் பன்னிரண்டாம்நாள் தென்றிசைக்கடலைக் கண்டார்கள்.]

திருவடிதொழுதபடலம் முற்றியது.

சுந்தரகாண்டம் முற்றுப்பெற்றது.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

ஸ்ரீ:

# *புல்லையந்தாதி.

சென்ற கோடைவிடுமுறையில் யான் தஞ்சைக்குச் சென்று அங்கே சிலநாள் தாமதிக்கநேர்ந்தது. அங்கு மாட்சிமிக்க ஸரபோஜி மன்னரால் கற்ரூேர் உள்ளத்தைக் கவருந்திறத்ததாய் அமைந்த சரசுவதிமஹால் என்னும் நூல்நிலையம் பலகலைகளின் பொக்கிஷமாய் விளங்குவது எவரும் அறிந்ததே. அங்குத் தங்கியிருந்த நாள்களில் நாள்தோறும் அந்நிலையத்திற்சென்று யான் நெடுநாளாய்க் கருதியிருந்த சில சிறிய நூல்களைப் பிரதிசெய்துவந்தேன். அங்கு ஓரே ஏட்டிற் பல சிறிய நூல்கள் சேர்ந்திருந்தன. அவற்றுள் ஒரு நூல், "பிள்ளையந்தாதி" என்று புத்தகசாலை அட்டவணையிற் காட்டப்பட்டிருந்தது. அது அச்சேறிய தேசிகப்பிரபந்தத்திற் சேர்ந்த "பிள்ளையந்தாதி" என்னும் பிரபந்தம்போலும் என்று எண்ணியிருந்தேன். முடிவில் அதனை ஏட்டுப்பிரதியிற் பார்த்த பொழுது "புல்லையந்தாதி" என்றிருந்தது. செய்யுட்களைப் படித்துப் பார்த்தபின் அது திருப்புல்லாணிவிஷயமான பதிற்றுப்பத்தந்தாதி என்று தெரியவந்தது. அது இதுகாறும் அச்சேருததாகவும் சொல்நயம் பொருள்நயம் பொதிந்ததாகவும் இருந்தமையின் அதனையும் பிரதிசெய்யத்தொடங்கினேன். சுமார் 30-செய்யுட்கள் பிரதிசெய்யுமுன்பே அச்சுவடியில் இடையிடையே சில ஓலை இல்லாமலும் சிதைந்தும் தெளிவின்றியும் இருந்தமையால் ஊக்கக் குறைவு ஏற்பட்டது. அதனேடு அங்குநின்றும் யான் விரைவிற் புறப்படவும்நேர்ந்தமையால் இந்நூல்முழுதும் பிரதிசெய்துமுடிக்க இயலாமற்போயிற்று.

இந்நூலின் ஆசிரியர் இன்னர் என்றேனும் அவரது வரலாறேனும் அறிதற்கு யாதும் இடமில்லை. இந்நூலின் சொல்நயம் பொருள்நயங்கள் கற்ரூேர் கண்டு களிக்கத்தக்கனவென்று கருதி யான் பிரதிசெய்த அளவில் இங்கு வெளியிடுகின்றேன்.

---

* உரிமை பதிப்பாசிரியர்க்கே உரியது.

இதனைக் கண்ணுறும் தமிழன்பர்களுள் இந்நூற்பிரதி முற்றவு முடையார் உளமுவந்து உதவுவரேல் அதனை மிகவும் நன்றியறித லுடன் ஏற்று விரைவில் வெளியிடலாகும். அரிய தமிழ் நூலொன்று சிதலுக்கிரையாகாமற் காப்பாற்றிய பேறும் அவர்க்கே உரியதாம்.

இங்ஙனம்,

**வித்வான். ரெ. இராமையங்கார்,**
தலைமைத்தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல், மதுரை.

## புல்லையந்தாதி.

### காப்பு.

சீர்பூத்த மணிமார்வுங் கமலக் கையுஞ்
சிலைவாடண் டாழிசங்குஞ் சிறக்க மேவும்
வார்பூத்த முலைத்திருமான் களிக்குங் கோமான்
மருவுபுல்லை யந்தாதி வழுத்த நாளுங்
தார்பூத்த மார்வினரா யுயிர்க்கங் கங்காய்ச்
சராசரமாய் வெறுவெளியாய்த் தனியா யெங்குங்
கார்பூத்த மேனியராய் நிறைந்து நிற்குங்
கைமலைச்செம் மலையிருத்திக் கருத்திற் சேர்ப்பாம்.

### வேறு.

புகழ்பெறு திருமால் மேவும் புல்லையந் தாதி கூறச்
சுகர்சவு னகரக் ரூரர் துருவர்நா ரதர்காண் டீபர்
அகமகி ழம்ப ரீட ரனுமன்வெங் கலுழன் மற்று
மகிமைசேர் பரம பாக வதர்பதம் வணங்கு வோமே.

### நூல்.

1 பொன்மருவும் புல்லாணிப் பதிக்கிறைவா
வெனையாளும் புனித மாலே
மின்மருவு மணிமார்வுங் குழைக்காது
மலர்முகமும் விளங்குந் தோளும்

பன்மணிப்பூ ணிலவெறிப்பக் கலுழன்மிசை
யெதிர்தோன்றிப் பரிவு கூர்ந்தென்
றன்மனத்திற் குடியாகி யெக்காலு
மகலாமற் றங்கு வாயே.

2 தங்கமலை முலையார்கண் மாயவலைக்
காளாகித் தயங்கி யேயென்
னங்கமலை யாமலெங்கா னுன்னடியார்
தன்னடியா னுவே னையா
சங்கமலை வாயின்முத்தங் கொழித்திடுசக்
கரதீர்த்தத் தடஞ்சூழ்ந் தென்றுஞ்
செங்கமலை மேவுதிருப் புல்லாணி
மருவிவளர் செங்கண் மாலே.

3 மாலையிலே முகங்காட்டி மெய்காட்டி
முலைகாட்டி மைக்கண் காட்டி
மூலையிலே யிடங்காட்டிப் பொய்யாசை
காட்டுமின்னுர் மோக மாகும்
ஆலையிலே சிக்குமிக்கா யலைவேனை
யெந்நாள்வந் தாள்வாய் சூதச்
சோலையிலே குயிலிசைக்க மயினடிக்கும்
புல்லைநந்தாச் சுருதி யானே.

4 நந்தானைக் கரமணிந்த நந்திதன்னைக்
காமனொடு நளினத் தானைத்
தந்தானைப் பசுந்துளவத் தாரானைச்
சகலசரா சரங்கள் வாழ
வந்தானை யிரண்டுகொங்கை வாரானை
யொத்ததிரு மருவுங் கீர்த்திச்
சிந்தானைச் சிந்தனைசெய் தார்க்கருள்வான்
மருவுபுல்லைச் செழுங்காட் டானே.

5 காட்டானைக் குறுதுயராங் காட்டானைத்
திருமருவிக் களிக்குஞ் செம்பி
நாட்டானைப் பவத்திலெம்மை நாட்டானைக்
கசடரையெந் நாளுஞ் சேர
மாட்டானைப் புரந்தபசு மாட்டானைப்
பிறவிதனில் வணங்கி னோரை
வீட்டானைப் பரமபத வீட்டானைப்
புல்லையினாம் விரும்பு வோமே.

6 விரும்பாலை யிகழ்ந்தரசை விரும்பிவளர்
புல்லாணி விமலர் தாளி
லரும்பாலைப் பலகனியைச் சொரிந்துபணி
யாமலென்ற னாசை யாலே
கரும்பாலை தனிலுழன்றாப் போன்மடவார்
மீதிலென்றுங் கருத்தை வைத்தேன்
சுரும்பாலைச் சிலைமார னரும்பாலே
மதிமயங்கித் துடிக்கின் றேனே.

7 துடித்தானைக் கருள்கருணைத் துடியானை
யரக்கர்கிளை சோரச் சோர
வடித்தானைக் கமலமல ரடியானைப்
பாரதப்போ ரனைத்துந் தானே
முடித்தானை மணிமகுட முடியானை
யிடையர் நெய்ப்பால் முழுதும் வாரிக்
குடித்தானைப் புல்லாணிக் குடியானைக்
கருமுகிலைக் கும்பிட் டோமே.

8 கும்பிடுவார் மேனியெங்குங் குழைத்திடுவார்
மதிமயங்கிக் கோயி றோறு
நம்பிடுவார் போற்றிரிவார் நமனாருக்
காளாகி நரகில் வீழ்வார்

வம்பிடுவார் முலைத்திருமான் மருவுபுல்லைப்
பதிமாலை வணங்கி மூரிக்
கம்பிடுவா ரலைமுழக்கக் கடரெட்டார்
பிறவாத கதிதொட் டாரே.

9 தொட்டளக்க வெண்சாணுஞ் சாணுகிப்
புல்லரைச்செஞ் சொல்லாற் பாடி
யெட்டெழுத்தை யோதாம லேலெ(ழ)ழுத்தை
யெக்காலு மியம்பு வேனே
மட்டிருக்குஞ் செங்கமல மாதிருக்கு
மணிமார்வா வணங்கிப் போற்றுஞ்
சிட்டருக்கே யருள்புரியும் புல்லாணி
மருவுதெய்வச் சிலைவல் லோனே.

10 வல்லாடுஞ் சாண்குழிக்கா யில்லாத
பொய்களெல்லாம் வாயாற் சொல்லிக்
கல்லான நெஞ்சினர்பாற் செல்லாம
னின்கருணை காட்டா யையா
நல்லாரு மெனைப்போன்ற பொல்லாரும்
பரகதியை நண்ண நாளுஞ்
செல்லாருங் கோபுரஞ்சூழ் புல்லாணி
மருவுதெய்வச் சிலையி னனே.

வேறு.

11 நானே புல்லைப் பதிப்பிறந்தே
னல்லே னவ்வூர் தனில்வசிக்கத்
தானே கிடையா தாகிலந்தோ
சமனே பிடிக்கத் தளர்வேனே
தேனே கனியே தெவிட்டாத
தெள்ளா ரமுதே புல்லாணிக்
கோனே யினியா கினுமருள்வாய்
குருவே யிரவி குலத்தோனே.

12 குலத்திற் பெரியோ ராளுனுங்
குறியார் தவங்கள் புரிந்தாலு
நலத்திற் சிறந்த புல்லாணி
நகரங் கடையோரக்கண்ட?
தலத்திற் குரங்காய்ச் சுணங்கினமாய்த்
தருவாய்ப் புல்லாய்ப் பொல்லாத
மலத்திற் புழுவாய்ப் பிறந்தாலு
மறலி முகத்தில் விழியாரே.

13 ஆரா வமுதே புல்லாணிக்
காசே யெந்தை பெருமானே
நீரார் சடையா ரிரவொழித்த
நிதியே விதியே துதிக்கவளர்
காரார் முகிலே யடியேற்குக்
கண்ணே கண்ணின் மணியொளியே
தாரார் புயநின் பழவடியார்
தாளே யெனவுந் தாளாயே.

14 தாளா னுலகை யளந்தாளுந்
தனிமா முதலே யினிதான
வாளார் விழிப்பூ மீதிருந்த
மாதைப் புணரு மணிமார்பா
வாளாய் புல்லைப் பதிக்கிறைவா
வடியார்க் கெளிய பெருமானே
தோளாற் றுளவத் தொடைசுமந்த
துய்யா கமலக் கையானே.

15 கையான் மலர்கொண் டருச்சிக்கக்
காதா லுனது கதைகேட்க
மெய்யால் வணங்க முடிதாழ
விழியா லுனைக்கண் டன்புருகத்

துய்யா வரந்தா குலிசனயன்
றொழிலைத் தரினு மதுவேண்டே
னெய்யார் கமல மகட்புணர்ந்த
நிதியே புல்லைப் பதியானே.

16 பதியார் பவத்தி லுருவெடுக்கப்
பாரார் பாரானதி லினிமேல்
விதியா ரவர்பா னமைச்செல்ல
விதியார் துதியாய் மடநெஞ்சே
ததியா னதைவெண் ணையைத்திருடித்
தாம்பா லடித்துந் தாம்பாலே
மதியா தெடுத்தோர் புல்லையெந்தை
மணந்தே பொன்னைப் புணர்ந்தோரே.

17 பொன்னைப் புவியை மனைவியரைப்
புதல்வர் தமைக்கண் டுருகியென்றுந்
தன்னை மறந்த கொடியோரே
சமன்வந் தழைத்தா லென்செய்வீர்
என்னைப் புரக்கும் புல்லாணி
யிறைசேர் பூமி திருந்தரசாள்
மின்னைப் பணிந்தா லிகபரத்தில்
விளங்குஞ் சிறப்பே பெறுவீரே.

18 சிறப்பைப் பொழியும் புல்லாணித்
தேவ னரசு நீழலிற்கார்
நிறப்பை யரவிற் கண்டுயிலும்
நீல மலையி னடியார்கள்
பிறப்பை யொழிப்பான் வினைப்பயனாற்
பிறந்து தொழுதோர் நினைத்தபடி
யிறப்பைப் பிடுங்கி வெறும்வெளியி
விருப்பீ ரெனச்சே கரிப்பானே.

19 கரிக்கன் றுதவும் பெருமானைக்
கருத்தாய்த் துதிப்போர்க் கின்பமெல்லாம்
தெரிக்குந் திருப்புல் லாணியனைத்
தெரிசித் தேசற் றொழியாமல்
விரிக்குங் கமல முகங்காட்டி
விலைக்கே காம நிறுத்துவிற்கும்
வரிக்குங் குமப்பூண் முலைமாதர்
மாய வலைக்குட் டுவண்டேனே.

20 வண்டு துளையும் பசுந்துளவ
மாலை யிருந்த மணிமார்வுந்
தண்டு தவர்வா ளாழிசங்கந்
தரித்த கரமு மலர்முகமுங்
கொண்ட லனைய மெய்யழகுங்
குழைக்கா தழகுந் திருவடியும்
கண்டு தொழுதால் மருவுபுல்லைக்
காட்டான் பிறவி காட்டானே.

வேறு.

21 காட்டிலெறித் திடுநிலவு போலும் பொன்னைக்
கடனடுவி லேகவிழ்த்தாற் போலும் வண்ட
மாட்டினுக்கு விலைகொடுத்தாற் போலும் புல்லர்
மனைதோறுங் கவிபாடி மனம்புண் ணாகிப்
பாட்டினுக்குப் பரிசுபெறாப் புலவீர் வேண்டும்
படியுமக்கே யிகபரமும் பகிர்வான் றேரை
மூட்டிவிசை யனுக்கூர்ந்த பாகன் புல்லை
முகுந்தனையே துதித்திடுவீர் முழுதுந் தானே.

22 முழுதுமாய்ப் புலையரெனுங் கொடிய ரேனு
மூடரெனுங் கடையர்கெட்ட மூர்க்கரேனு
மழகாகத் திருவரசைக் கண்ணுற் கண்டோ
ரவர்காணும் பொன்னுலகா ளமர ராவார்

தழல்வேள்விக் குளரேனுந் தக்கோ ரேனுஞ்
சதுர்மறைகற் றோரேனுந் தவத்தோ ரேனும்
பழவேதப் பொருடுதிக்குந் திருப்புல் லாணிப்
பதியினைக்கண் டறியாதார் பதிதர் தானே.

23 பதிதொறும்போ யலைந்துபுல்லர் முகத்தைப் பார்த்துப்
பற்காட்டிச் சொற்காட்டிப் பணத்தைத் தேடி
மதியிழந்து மனைவிமக்க ளாசா பாச
வலைக்கழிவீ ரலைக்கழிக்கு மறலி வந்தாற்
கதியுமக்கார் விதிவிலக்கி யொருவர் வந்து
கைகொடுப்பா ருளரோவெக் காலும் புல்லைக்
கதிபதிமா தவமுகுந்தா வென்றாற் போது
மையமில்லை நமனைவெற்றி செய்ய லாமே.

24 செய்யிலே சாலிமுத்த நிலவு காட்டுந்
திருப்புல்லா ணியின்மருவுஞ் சிமான் கோமான்
மையிலே தோய்ந்தவிழிப் பொதுவர் மாதர்
மனைதொறும்போ யவரையெல்லா மயக்கிச் சேர்ந்தும்
பொய்யிலே முழுகிநின்றுந் தயிர்பால் வெண்ணை
புலனறிந்து திருடியுண்டு போட்டு நின்றுண் ?
ணெய்யிலே கைபிடவுந்........................*
..............................................
..................................................
..............................................
..................................................
..............................................
..................................................
..............................................
..................................................
..............................................

* இங்கே ஓரேடு காணப்படவில்லை.

27 ......................................................
......................................................
......................................................கஞ்சப்
பூமீதி லிருந்தவளைப் புணருந் தேவைக்
கொண்டலெனு மெய்யனையென் னையன் றன்னைக்
கூர்ந்துபணிக் கிடத்தேடிக் கொண்டுவந்து
கண்டவர்கா ணார்காணர் காண்பா ராகக்
கருப்பையுருப் பெரும்பிறவிப் பொருப்பைத்தானே.

28 பொருப்பையா னினங்காக்கக் குடையாய் மேனாட்
பொற்கரத்தா லெடுத்தவன்சேர் புல்லா ணிக்கே
யிருப்பையா கினுமிருப்பார்க் கேவ லேனு
மெளியேனுக் கிவ்வளவிங் கேனு மானால்
வெருப்பையா டரவினைவிட் டரசின் கீழே
விருப்புறப்புற் பரப்பியங்ஙன் விரும்பித் தூங்கும்
தருப்பையா னெமக் கினிமேற் கருப்பை யான
தனுப்படையான் றனுப்படையான் சங்கத் தானே.

29 சங்கத்தா னவரைவென்ற தேவே புல்லைத்
தனிமுதலே கனியமுதே தாணு வேபொன்
னங்கத்தாய் நவநீத சோரா கண்ணா
வரிமுகுந்தா கோவிந்தா வடியேற் காவி
மங்கத்தா னவதியிட்டுக் கருங் கடாவின்
மறலிவரு முனமவனை யெப்போ ............
துங்கத்தா னவமலர்ப்பொற் பாதங் காட்டித்
துணையிருந்து தாரகத்தைச் சொல்லுவாயே.

உலகத்தில், மூத்தபிள்ளையானவன் குலத்தில் பெரியோன்; பிதிரர்களுக்கு மிகவும் பிரியமானவன்; ஆகையால் மூத்தவனிடம் இளையவன் நடந்துகொள்ளவேண்டிய நடக்கைகளைக் கவனித்து நானே (அரக்கனுடன்) செல்வேன்.

மூன்றுமவன்:—அண்ணன்மார்களே! அது ஒழுங்கன்று.

ஜ்யேஷ்டப்ராதா பிதுஸ்ஸம:
கதிதோ ப்ரஹ்மவாதிபி:।
ததோ ஹமேவ யாஸ்யாமி
தாதாணாம் த்ராணகாரணாத்॥

மூத்தவன் தந்தைக்கு ஒப்பாவான் என்று வேதமறிந்த பெரியோர்கள் சொல்லுகிறார்கள். எனக்குப் பெரியோர்களான தமையன்மார் தாய் தந்தை: இவர்களுடைய உயிரைக் காப்பதற் காக நானே போவேன்.

பெரியோர்:—எனக்கு மிகவும் அன்புள்ள மூத்தவனை விட்டு விட மனம் சம்மதிக்கவில்லை.

பார்ப்பனி:—பெரியவர் மூத்தவனை விரும்பினால் நானும் இளையவனை விரும்புகிறேன்.

இரண்டாமவன்:—தாய்தந்தையர்களால் விரும்பப்பெறாத வன் யாருக்குத்தான் பிரியமானவனாவான்?

கடோற்கசன்:—நான் விரும்புகிறேன். விரைவில் என்னுடன் வருவாயாக.

இரண்டாமவன்:—

யதோஹஸ்மி யத்ராத்ராணா:
ஸ்வை: ப்ராணை: பரிரக்ஷிதா:।
ஸம்யதோஸ்நேஹாத்யேஹத:
காருஹ்யோஸ்நஹம் ததஸ்ஸுஹ:॥

நான் எனது கடமையை நிறைவேற்றிய பாக்கியவான்; என் உயிரால் பெரியோர்களின் உயிர்களைக் காத்தேன். உறவினர்களிடம்வைத்த நேசத்தைக் காட்டிலும் எமனுடன் கொள்ளும் நேசம் கிடைத்தற்கரியது.

கடோற்கசன்:—ஆச்சரியம். இந்தப் பார்ப்பனச்சிறுவன் சுற்றத்தாரிடங்கொண்ட நட்பு, புகழத்தக்கதே.

இரண்டாமவன்:—(தந்தையைநோக்கி) ஓ அப்பா! தெண்டனிடுகிறேன்.

பெரியார்:—புதல்வ! வா வா.

𑌵𑌿𑌨𑍀𑌯 𑌗𑍁𑌰𑍂𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌰𑍍𑌗𑍁𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 ।
𑌸𑍁𑌕𑍃𑌤𑌾𑌢𑍍𑌯𑍈𑌰𑌵𑌾𑌪𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌹𑌿 ॥

பெரியோரிடம் நேசங்கொண்ட குழந்தாய்! தனது உயிரைக் கொடுத்துப் பெரியோருயிரைக் காத்தவனே! நன்மைசெய்யாதவர்களால் அணுகக்கூடாத பிரமலோகத்தை நீ அடைவாயாக.

இரண்டாமவன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன். (தாயைநோக்கி) அம்மா! நான் வணங்குகிறேன்.

பார்ப்பனி:—குழந்தாய்! வெகுகாலம் வாழ்வாயாக.

இரண்டாமவன்:— அநுக்கிரகிக்கப்பெற்றேன். (மூத்தோனைநோக்கி) அண்ணா வணங்குகிறேன்.

முதலாமவன்:—குழந்தாய்! அருகே வருவாயாக;

𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑌸𑍍𑌵 𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌤𑌃 𑌸𑌾𑌧𑍁𑌭𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑍈𑌃 ।
𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌵 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌤𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑌾 ॥

நற்குணங்கள்நிரம்பிய நீ, என்னை இறுகக் கட்டிக்கொள்வாயாக. உனது புகழால் இப்பூமியே தழுவப்பெற்றதாக ஆகும்.

இரண்டாமவன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

மூன்றுமவன்:—(இரண்டாமவனைநோக்கி) அண்ணா! வணங்குகிறேன்.

இரண்டாமவன்:—நல்லது.

மூன்றுமவன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன்.

இரண்டாமவன்:— (கடோற்கசனைநோக்கி) ஓ! புருஷரே! நான் சில சொல்லுகிறேன்.

கடோற்கசன்:—விரைவில் உரைப்பாய். உரைப்பாய்.

இரண்டாமவன்:— இக்கானகத்தில் ஒரு நீர்நிலை உளதுபோல் தோன்றுகிறது. பரலோகத்தையடைபவனுன நான் தாகவிடாய் தீர்த்துக்கொள்ளுகிறேன்.

கடோற்கசன்: — பரலோகம்புகத் துணிந்த மகானே! விரைவிற் சென்று திரும்பிவருவாயாக; என் அன்னையார் உண்ணும் வேளை நெருங்கிவிட்டது. விரைவில் வருவாயாக.

இரண்டாமவன்:—ஐய! இதோ போகிறேன்.

(என்று வெளியே செல்லுதல்)

பெரியார்:—ஐயோ! ஐயோ! அரக்கனுல் மோசஞ்செய்யப் பட்டேனே! குழந்தையை இழந்தேனே!

யஸ்த்ரிஶ்ருங்கோ மஹாஶைலஸ்த்வாஸீந்மே நாத்ய வம்ஶவர்த்தந:।

ஸ மத்யஶ்ருங்கஹம்ஸேந நஷ்டஶ்ரீர்த்ருஶ்யதே ॥

மூன்றுகொடுமுடிகளோடுகூடிய எனது பிரியமான "வம்சம்" என்றமலையானது, இப்பொழுது நடுக்கொடுமுடி போய்விட்டதால் என் மனதை மிகவும் வாட்டுகிறதே!

என்செய்வேன்? ஓ குழந்தாய்! போய்விட்டானே.

தாரேண தாரேணா நரர்ப்பிவகாஶே

நியமேவாராயுப நவ்யஸக்தவாரேஸ।

கயத்ரிஹஹஜநாஜஜஞ்ஜஸந்

ஷாராரிவ யாஸ்யஸிவாஷ்டிதாவி நாஶ ॥

ஓ இளங்குமரனே! வயதுக்குத்தகுந்த அழகுவாய்ந்தவனே! முறைதவருமல் வேதமோதுதலில் ஆசைகொண்டவனே! யானையின் கொம்புகளால் முறிக்கப்பட்ட நல்லமலர்களுடன்கூடின மரம்போல் விநாசத்தை அடைகிருயே! என்செய்வேன்!

கடோற்கசன்:—பார்ப்பனச்சிறுவன் தாமதிக்கிருனே! என் அன்னையின் ஆகாரவேளை வந்துவிட்டதே! நான் என்செய் வேன்! இருக்கட்டும். கஷ்டம்! (பெரியாரைநோக்கி) பார்ப்பனரே! உம்முடைய புதல்வனை அழைப்பீராக.

பெரியார்:—சீ! அரக்கனுடைய தன்மையையும் மீறியதுபோல் இருக்கிறது உன் வசனம். (கொடிய அரக்கனும் இவ்விதம் உரைக்க மாட்டானே)

கடோற்கசன்:—ஐயா! கோபங்கொள்ளவேண்டாம். தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும். இது என் சுபாவதோஷம். நும் புதல்வன்பெயர் என்ன?

பெரியார்:—இதைக்கேட்கவும் என்மனம் பொறுக்கவில்லையே!

கடோற்கசன்:—சரி. (மூத்தகுமாரனைநோக்கி) பார்ப்பனக்குமர னே! உன் தம்பியின்பெயர் யாது?

முதலாமவன்:—அந்தப் பேதையின் பெயர் நடுவன் என்பது.

கடோற்கசன்:—அவன் மூவர்களில் நடுப்பிள்ளையாதலால் "நடுவன்" என்பது பொருத்தமானதே; நானே கூப்பிடுகிறேனே. நடுவ! நடுவ! விரைவில் வருவாயாக.

(பீமசேனன் வருதல்)

பீமசேனன்:—ஓ! இந்தக்குரல் யாருடையது?

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பறவைக்கூட்டங்களின் பலமான சத்தத்தால் நிரம்பினதாயும், மரங்கள் அடர்ந்ததாயும், ஒருவரும் ஊடே செல்லக்கூடாததாயும் இருக்கிற இக்கானகத்தில் உரக்கக்கேட்கப்படுகிற இந்தச் சத்தமானது, அர்ஜுனனது குரல்போல் கெம்பீரமாயிருந்தாலும் என் மனத்தில் துன்பம்விளைக்கிறதே.

கடோற்கசன்:—பிராமணச்சிறுவன் தாமதிக்கிருனே! அன்னையாரின் ஆகாரவேளையாகின்றதே! நான் என்ன செய்வேன்! இருக்கட்டும். கஷ்டம். உரக்கக்கூவுகிறேன். ஓ! ஓ! நடுவ! விரைவில் வா.

பீமசேனன்:—இந்த வனாந்தரத்தில், என் தேகப்பயிற்சிக்குத் தடையாக, எவனே ஒருவன் நடுவ! நடுவ! என்று என்னைக் கூப்பிடுகிருனே. இருக்கட்டும், பார்ப்போம். (நெருங்கிவந்து பார்த்து) இந்தப் புருஷன் அழகுள்ளவனுயிருக்கிருன்.

𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑍍𑌯𑌃 𑌸𑌿𑌂𑌹𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑍋 𑌮𑌧𑍁𑌨𑌿𑌭𑌨𑌯𑌨𑌃
𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌗𑌂𑌭𑍀𑌰𑌕𑌣𑍍𑌠𑍋
𑌬𑌭𑍍𑌰𑍁𑌭𑍍𑌰𑍂𑌃 𑌶𑍍𑌯𑍇𑌨𑌨𑌾𑌸𑍋 𑌦𑍍𑌵𑌿𑌰𑌦𑌪𑌤𑌿𑌹𑌨𑍁
𑌰𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌵𑌿𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑍇𑌶𑌃

𑌵𑍍𑌯𑍂𑌢𑍋𑌰𑌾 𑌵𑌜𑍍𑌰𑌮𑌧𑍍𑌯𑍋 𑌗𑌜𑌵𑍃𑌷𑌭𑌗𑌤𑌿
𑌰𑍍𑌲𑌮𑍍𑌬𑌪𑍀𑌨𑌾𑌂𑌸𑌬𑌾𑌹𑍁𑌃
𑌸𑍁𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌜𑍋 𑌵𑌿𑌪𑍁𑌲𑌬𑌲𑌯𑍁𑌤𑍋
𑌲𑍋𑌕𑌵𑍀𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃॥

இவன் சிங்கம்போன்ற முகமும் சிங்கப்பற்களுமுடையவன்; தேன்போற் சிவந்த கண்களுடையவன்; மதுரமாயும் கெம்பீரமாயுமுள்ள குரல்வாய்ந்தவன்; பொன்போல் மஞ்சள்நிறமான புருவமுடையவன்; கழுகின்மூக்கைப்போல் வளைந்த மூக்குடையவன்; விசாலமான மார்புடையவன்; வச்சிராயுதம்போல் திண்ணிதான இடுப்புள்ளவன்; களிறும் ஆனேறும் போலும் நடையுடையவன்;

நீண்டு பெருத்துத் தொங்கும் கைகள் வாய்ந்தவன்; மிக்க பலமுள்ளவன்; உலகிற்சிறந்த வீரனுக்கு ஓர் அரக்கியிடம் பிறந்தவனுகவே காணப்படுகிறுன்.

கடோற்கசன்:—பிராமணச்சிறுவன் தாமதிக்கிறுனே! அன்னையின் ஆகாரவேளையாய்விட்டதே! நான் இனி என்செய்வேன்! இருக்கட்டும், உரக்கக்கூப்பிடுகிறேன். ஓ! ஓ! நடுவ! விரைந்து வா.

பீமசேனன்:—இதோ வந்துவிட்டேன்.

கடோற்கசன்:—இவன் பிராமணச்சிறுவனல்லன்; இந்தப் புருஷன் மிகவும் அழகுவாய்ந்தவன்;

ஸிம்ஹாக்ருதி: கநகதாலஸமாநபாஹு
ர்மத்யே தநுர்கருடபக்ஷவிலிப்தபக்ஷ: ।
விஷ்ணுர்பவேத்விகஸிதாம்புஜபத்ரநேத்ரோ
நேத்ரே மமாஹரதி பந்துரிவாகதோऽயம் ॥

இவன் சிங்கம்போல் பலமுள்ள தேகம்வாய்ந்தவன்; பொன்னுலாகிய பனைமரம்போல் நீண்ட கைகளுடையவன்; சிறிய இடையுடையவன்; கெருடனுடைய சிறகுபோல் மேடுபள்ளமில்லாத விலாப்படைத்தவன்; மலர்ந்த தாமரையிதழ்போல் விசாலமான கண்கள் படைத்தவன்; ஒருக்கால் மகாவிஷ்ணுவோ! இங்கேவந்து என் உறவினன்போல் என் கண்களைக் கவர்கின்றுனே!

ஓ நடுவ! உன்னைத்தான் கூப்பிடுகிறேன்.

பீமசேனன்:—ஆகையால்தான், நான் வந்தேன்.

கடோற்கசன்:—தாங்களும் "நடுவரோ"?

பீமசேனன்:—நான் வேறு ஒருவனல்ல.

மத்யமோऽஹமவத்யாநாம் உத்க்ருஷ்டாநாஞ்ச மத்யம: ।
மத்யமோऽஹம் க்ஷிதௌ பத்ர! ப்ராத்ருணாமபி மத்யம: ॥

கொல்லக்கூடாதவர்களுள் நான் நடுவன்; சௌர்ய வீர்யங்களால் கொழுத்தவர்களுள் நான் நடுவன்; ஓ அன்ப! பூமிக்கும் நான் நடுவன்; சகோதரர்களுக்குள்ளும் நான் நடுவனே.

கடோற்கசன்:—இருக்கலாம்.

பீமசேனன்:—

മധ്യമഃ പഞ്ചഭൂതാനാം പാർഥിവാനാം ച മധ്യമഃ।
ഭവേ ച മധ്യമോ ലോകേ സർവകാര്യേഷു മധ്യമഃ॥

பஞ்சபூதங்களுள் நான் நடுவன்; அரசர்களுக்குள்ளும் நான் நடுவன்; என் தாய்வயிற்றுப்பிறந்தவர்களிலும் நான் நடுவன்; உலகில் எந்தக்கார்யங்களிலும் நான் நடுநிலைமைவகித்தவன்.

பெரியார்:—

മധ്യമഃ ക്ഷിതിസംപ്രാപ്തേ നഷ്ടം പാണ്ഡവമധ്യമഃ।
[illegible]॥

"நடுவன்" என்று சொன்னதால், பாண்டவர்களுள் நடுவன் (பீமசேனன்), யமனுடைய கொழுப்பிலிருந்து தோன்றியவன் போல், நம்மை விடுவிப்பதற்காக இங்கு வந்திருக்கிறான். அது நிச்சயம்.

(அந்தண) நடுவன்:—(திரைக்குள் நுழைந்து) பரலோகத்தில் கிடைக்காததும் தாமரையிதழ்களுடன் பிரகாசிக்கிறதுமான குளத்துநீரை ஆசமனஞ்செய்து வந்துவிட்டேன்.

(கடோற்கசனை யணுகி) ஓய்! வந்துவிட்டேன்.

கடோற்கசன்:—நீ இப்பொழுதன்றோ வந்துசேர்ந்தாய்? நடுவ! நடுவ! இங்கே, இங்கே (வா)

பெரியார்:—(பீமசேனனை அணுகி) ஓ! நடுவ! பார்ப்பனக்குடும்பத்தைக் காப்பாற்றுக.

பீமசேனன்:—அஞ்சவேண்டாம்; அஞ்சவேண்டாம், நடுவனை நான் வந்தனைசெய்கிறேன்.

பெரியார்:—வாயுவைப்போல் தீர்க்காயுளுடையவனுயிருப்பாயாக.

பீமசேனன்:—அநுக்கிரகிக்கப்பெற்றேன். பெரியாருக்கு எதனுல் அச்சம்?

பெரியார்:—கேட்பாயாக. நான், குருராஜனுல் முன் ஆளப்பட்ட 'குருஜாங்கல'மென்ற நாட்டில் 'யூப'க்கிராமத்தில் வசிப்பவனும், "மாடர" கோத்திரத்துப் பிறந்தவனும், கல்பசாகையை அத்தியயனஞ்செய்து வேள்வியைச் செய்விக்கத்தகுந்தவனுமான கேசவதாஸனெனப்பெயர்வாய்ந்த ஓர் அந்தணன். எனக்கு வடதேயத்தில் 'உத்யாமகம்' என்ற கிராமத்தில் வசிப்பவரும் கௌசிககோத்திரத்தில் பிறந்து "யஜ்ஞபந்து" வெனப் பெயர்பெற்றவருமான தாய்மாமன் இருக்கிருர். அவருடைய புதல்வன் உபநயநத்தைக் கண்டு களிக்க, மனைவியுடன் புறப்பட்டேன்.

பீமசேனன்:— தங்களுக்கு வழியில் இடையூறில்லாமலிருக்கட்டும். மேலே சொல்வீராக.

பெரியார்:—பிறகு இவன் என்னை,

ஸஜலஜலதநீலஃ பங்கஜாயதாக்ஷோ
ஹரிதபிங்கலகேசோ ராக்ஷஸஃ ப்ராம்ஶுதம்ஷ்ட்ரஃ।
ஜகதி விசரஸிம்ஹஃ ஸ்த்ரீயாநாம் ஸமீக்ஷம்
ஸஸுதபரிஜநம் மாம் ஹந்துகாமோऽப்யுபைதி॥

நீருண்டமேகம்போன்ற தேகம்வாய்ந்தவனும், தாமரையிதழ்போல் நீண்ட கண்களுடையவனும், சிங்கம்போல் கெம்பீரமான நடையுள்ளவனும், நீண்ட கடைப்பற்கள் வாய்ந்தவனுமான ஓர் அரக்கன், உலகத்தில் அச்சமற்றவனுக நம்போல்பவர்முன்னிலையிலே, மக்கள் பரிஜனங்களுடன்கூடிய என்னை ஐயோ! கொல்லவெண்ணி நெருங்கிவருகிருனே!

பீமசேனன்:—இப்படியா? இவனுல் அந்தணருக்கு வழியில் தடை 'ஏற்பட்டது. இருக்கட்டும்; இவனைப் பிடித்துவிடுகிறேன். ஓ! புருஷனே! நில் நில்.

## கஎ. தாந்தன் முத்திபெற்ற சருக்கம்.

1734 இரைத்த வெண்டிரைக் கடற்கலா பாரிதே னிமிர்தா
மரைப்பெ ருந்திரு முயங்குபே ரின்பமே மரீஇய
விரைப்ப சுந்தழாய் விண்டுவா மெனவிழு மியர்தேர்ந்
துரைத்த சாளக்கி ராமமா மொருவரை யுளதே. (க)

1735 ஆக மேய்தரு கொழும்பொன்னா லிடம்பயின் றமைந்த
யோக மாமிரு நிலத்தொடொன் றியல்பினால் வலது
பாக மேயுறு பருதியாற் சூன்முதிர் பருவ
மேக வண்ணமெய் தழைந்துந்தி பூத்துள விதியால். (உ)

1736 பனக மேற்பயில் பரமதாய் வானவர் பரவச்
சனகன் மாமக டன்னொடுந் தங்கியின் புறலா
லனக ராய்த்தன தடிப்பதிந் தவர்தமக் கழியாத்
தினக ரோதய மனையவந் தாமமுய்த் திடலால். (ங)

இவை மூன்றுந் தொடர்.

1737 பொற்பி னுக்கிணை யாவருண் டென்பதே போன்றொண்
கற்பி னுக்கும்வே றிணையிலை யாகுநன் கமலை
யற்பி னுக்கிணை யொருவர்மாட் டற்புள தெனிலவ்
வெற்பி னுக்கிணை யிருநிலத் துளதொரு வெற்பே. (ச)

1738 என்றி னிற்பெறு திகிரியேந் தியவிறை வனுட
னொன்றி னுக்கொரு கடவுள ரிணையென வுளரேன்
மன்றி னுட்சிறந் ததுவென நான்முகன் மதியிக்
குன்றி னுக்கிரு நிலத்திணை யுளதொரு குன்றே. (ரு)

1739 உரிய மாண்பொரு ளனைத்தையு முயவற வுரைப்பான்
பெரிய நான்மறை பிரமமா மிஃதென முதலே
யரியெ னும்பொரு ளுரைக்குமொப் புள்ளதா மெனிலக்
கிரியி னுக்கிரு நிலத்திணை யுளதொரு கிரியே. (சு)

1740 அறங்க ளாமென வாய்ந்துரைத் தவற்றினு ளடுதற்
றிறங்க லாதபே ரறத்தினோ டோரறந் திரைநீர்
கறங்கு பூதலத் திணையுள தாமெனிற் கழறப்
பிறங்க லுக்குநேர் வருவன வுளதொரு பிறங்கல். (எ)

1741 உரையி றந்துணர் விறந்ததொன் றினையுரைத் துணர்வான்
புரையி றந்தமெய் யுணர்வினை யளிப்பதே புரைதீர்
தரையு ளுத்தம தானமென் பவற்றுளுத் தமம்பொன்
வரையொ டாங்குல வரையுளுத் தமமுமவ் வரையே. (அ)

1742 நீண்ட பான்மையின் முழுதுநீ ணிதியமா மெனவே
மாண்ட மேருவின் பெருமையு மனக்கொடு மதித்தே
கூண்ட வார்சினை யாலம்வித் தொடுங்குற ணெடுமால்
பூண்ட தன்மையொன் றெனுமதன் சிறுமையும் புவனம்.()

1743 முறைசெய் தில்லறத் தொழுகுந ரேனைமூ வருக்கு
முறையு ளுண்டியோ டுறைதுயிற் றவிசுத வுவபோன்
றிறைகொ டண்ணிழ லின்கனி மலர்த்தவி சிருடீர்
மறைய வர்க்கருண் மரங்கடா மரீஇயதம் மலையே. (க௦)

1744 கலவ மஞ்ஞையஞ் சாயலார் காமமைக் கடலாழ்ந்
துலவு மைம்பொறி யடக்குமா தவர்களு முலவாப்
பலக லைத்துணி வையுமளைந் தொருதலை பயின்ற
புலவர் பூதலப் புலவர்வாழ் வமைத்ததப் பொருப்பே. (கக)

1745 சூழி யங்கரி யுரியினன் கிரிமுதற் றொகுத்த
பாழி மால்வரை யிடந்தொறும் பழவினை பரிவா
னூழி நான்முயன் றவர்தவ நிகர்க்குமோர் கணத்தவ்
வாழி மால்வரை யுறைந்தவ ரருந்தவ மன்னோ. (கஉ)

1746 முற்ற வம்பயின் றருந்தமிழ்ப் புலவர்முப் பொழுதுங்
கற்ற கல்வியை யிகலுறு தெஃகர்முன் கழறிப்
பெற்ற வின்பமு மளவுரைப் பரியதிப் பிறங்க
லுற்ற நற்றவத் தினரள வையுமுரைப் பரிதே. (கங)

1747 ஈகை தாரமோ டிளங்கதிர் நிறங்கிளிர் மணிபூஞ்
சாகை யாரம்வச் சிரமா கதந்திசை தழையா
மாக நள்ளிருட் பிழம்புசீத் தெழுஞ்சுடர் வலஞ்செய்
தோகை நீடுபொற் குன்றொடக் குன்றமொத் துளதே. (௧௪)

1748 விசும்பு தூர்த்தெழு சந்தனச் சோலையுண் மிளிர்பொன்
னசும்பு பாய்நிலத் தடியிடு மடுகளிற் றினங்க
ளிசும்பி ளுனுருண் டுருண்டுதாழ் வரையிறும் புறுதல்
பசுங்கதிர்க்குடைத்தொதுங்கிருள்பொருவுபான்மையதே.

1749 போலி மாய்த்தமாண் வயிரவான் குவடுபோழ்ந் தெழலு
மாலி மாய்த்ததண் மதியக டுரிஞ்சிவீ ழமிர்தின்
மாலி நீத்தமு மலிதலான் மறுக்கமந் தகர்க்குக்
காலி னீத்தவன் கயிலையங் கிரியெனக் கவினும். (௧௬)

1750 மூசி வண்டிமிர் கடாக்களி றதனிடை மூழ்கி
வாச வன்களிற் றீட்டமா வனவனத் துளவே
றீசன் வெண்ணரைச் சேவதாம் பறவைக ளிறைவன்
பூசல் வண்சிறைப் புட்குல மெனப்பொரு வருமே. (௧௭)

1751 தோன்ற ராகநன் முழுமணி யிணையிரு டுருவா
வீன்ற ராப்பகு வாயையங் காப்பகண் டினனைக்
கான்ற ராவினி யெமையும்வாய்க் கொளுமெனக் கருதா
வான்ற ராவரு மதியய லிரிதரா மறையும். (௧௮)

1752 கோட்ட மாமர மழைகிழித் திழிபுனல் குவித்த
தோட்ட நாண்மலர் திங்கள்போழ்ந் தெழச்சொரி யமுது
மாட்டி நீர்க்கரத் தணிமலர் சூட்டியா ரமுத
மூட்டி நாடொறும் வழிபடு பான்மையொத் துளவே. (௧௯)

1753 நாத வண்டிமிர் சந்தனப் பொதும்பரி னறுந்தேன்
மோதி வாரிதி யொலிதர வொருபுடை முழவிற்
சீத வண்புன லருவிநின் றலம்புமச் சிலம்பின்
வேத பண்டித னெனுமொரு வேதிய னுளனே. (௨௦)

1754 மலையெ னும்படி தோற்றமோ டளக்கலா வகையா
னிலைகு லாநில மெனும்படி பொறைமுத னிறைவா
னுலைவி லாமல ரெனும்படிக் குரைத்தவை யுடையான்
றலையெ னும்படி நடுவுநின் றறுபொரு டுணிவான். (உக)

1755 பூட்டை வாய்க்கொடுப் புரவுடைப் பசும்புழு வினைமட்
கூட்டைவாயடைத் துரைகொளீஇத் தனதுருக்கொடுக்கும்
வேட்டை வாளியிற் சரணமென் றடைந்தவர் விரும்ப
மோட்டை வாயிலைக் தடக்குவித் துயக்கொளு முறையான்.

1756 குலனும் வாய்மையுந் தூய்மையுங் குரவனைப் பேணு
நலனு மன்னுயிர்க் கிரங்கலு நளினைநா யகனைப்
புலனுள் வைத்தனு பவித்துள பொழுதுபோக் குதலும்
நிலனும் வானமு மதிப்பமெய் நிலைபெறு நெறியான். (உங)

1757 மீனு மாமையும் பறவையு மெனவிதித் தவற்றை
மானு நோக்கொடு நினைப்பொடு பரிசியா வளர்த்தே
யூனு மாவியு முணர்வுறுர்க் குணர்வையுய்த் துணர்வாந்
தேனு லாமலர் மடந்தைகாந் தனைத்தெளி விப்பான். (உச)

1758 பொன்றி டாவுரம் பற்றிய வொண்மதிப் புணையான்
நன்றி யங்கலைக் கடல்களை நீந்தியே ஞானக்
குன்றின் மேதக விருத்தனு மறையவர் குலத்தா
ரொன்று பட்டுள தாந்தனென் றுருபெய ருடையான். ()

1759 மடியு மானமு மறவியும் பிணியும்வஞ் சகமு
மிடியு நஞ்சினைப் பொருவும்வெஞ் சினமும் வேட்கையுமோர்
குடிய தாயுருக் கொண்டவன் மதிநலங் குலாய
வடிய ராயிர கோடியு ளவனிட மடைந்தான். (உசு)

1760 பொருண்ம லிந்தநன் பனுவலின் றுறைகள்போய்ப் புரைதீர்
தெருண்ம லிந்தவாய் மையனடி யவர்துதி செயவே
மருண்ம லிந்தசிந் தையன்றனை மருள்சிறி தணுகா
வருண்ம லிந்தகண் மலரினோக் கினனக மகிழ்ந்தே. (உஎ)

1761 பார்த்த போழ்தினி லவனிமீ தினிற்படிந் தனனுச்
சீர்த்த தாமரைச் சேவடி சென்னிசேர்த் துதலுங்
கூர்த்த நுண்பொரு ளுரையரு ளுதியெனக் குறையுற்
றேத்தி நின்றன னின்றவன் னிலைநினைந் திரங்கா. (உஅ)

1762 குறையு ருமதிப் பண்டிதன் விழுமிதாய்க் குறிக்கொண்
மறைப ராயமெய் மொழிகளை மனக்கொடு மதித்தங்
கறைதி நீயெனு வறைதொறு மறைதொறு மங்தோ
நிறையு ருனய தியனென வருநிய தியுமே. (உகூ)

இவையிரண்டுந் தொடர்.

1763 ஆரி யன்புரிந் தருண்மொழி யறனுமாக் கமுநன்
பாரி னெய்தினர் தமக்கழுக் காறுசெய் பவனும்
பூரி யன்புலத் தடைந்தவப் பொருமையைப் பொருத
வேரி யங்கம லாசனத் தவளென மீண்ட. (௩0)

1764 ஈன வாழ்க்கையு மின்பமு மொரீஇயபே ரின்ப
ஞான வாழ்க்கைய னுணர்ந்தநன் பனுவல்க ணவில்வான்
போன காலையிற் புன்புல மையர்குழாம் பொலிந்த
தான மெய்தலும் வல்லைமீண் டனவெனத் தணந்த. (௩க)

1765 தேசு லாயதத் துவங்கண்மூன் றையுந்தெரிந் துணர்த்து
மாசி லாதமாண் குரவரைப் பொழுதுடன் வழிபட்
[1]டீசன் றன்குணம் வடித்தநூற் கேள்வியொன் றிலரா
நீசர் பானிலை யுறுதமெய் யுணர்வென நீத்த. (௩உ)

1766 பண்ணிற் றாயநான் மறைமுதற் பொருளுரை பயின்ற
விண்ணிற் றாயவொண் பரலென வெள்ளைவா ரணன்றன்
பெண்ணிற் றாயவ ளாயினும் பிறன்மனைப் பிரிந்த
வெண்ணிற் றாயவன் மனமென வுராயின வெதிரே. (௩௩)

---

[பி-ம்.] [1] டீச னற்குணம். சா.

1767 கூட்ட முற்றவைம் பொறியுமுட் குறுநகை கொளற்கா
யோட்டை நெஞ்சினைக் கரந்தகூ டாவொழுக் கினொடு
நாட்ட மேதிலார் மனையினும் பொருளினு நனிதோய்
வேட்கை யாளரை வெறுத்தெழும் வாய்மைபோன் மீண்ட.

1768 கணக்கி றந்தவெங் நரகுக டொறுங்கடன் கழிப்பான்
புணர்க்கு மந்தக னிருப்பவும் பொறியுணர் வினராய்த்
தணத்தல் செய்தொரா யுவையத னுறைகுடிற் றடியாம்
பிணத்தை யுண்குந ரிடத்தருட் குணமெனப் பிரிந்த. ()

1769 ஆக்க முற்றவொப் புரவுணர்ந் தாதுல ரெதிர்ந்த
நோக்க நோக்கியீ கையுமின்றி மின்னினு நொய்தா
நீக்க யாக்கையும் பொளுமே நிலையென நிலஇய
போக்கர் வாழ்க்கையைப் புலந்துபோம் புகழெனப் போன.

1770 முயற்சி யானிழைத் துளபுலன் களைமுறை முறையே
யுயர்ச்சி யானுகர் வதற்குநல் வினையுமுற் றிலனு
வியற்றி யானெடுத் தயில்பொழு தவையிழுக் கலுறீஇ
யயற்ற வாதகொள் கலத்திழிந் தமைந்ததொத் தகன்ற. ()

1771 முற்ற வம்புரிந் தடைந்தவூழ் தாமுறை முறையே
கற்ற கல்வியுஞ் செல்வமும் பிறர்வயிற் கண்டின்
புற்று வாழ்வதற் றுள்ளம்வெந் தொழிவிலாத் துன்பம்
பெற்ற பேதைபாற் பொறையெனத் துன்புறப் பிரிந்த. ()

1772 தூய கல்வியுங் கவிதையு மூழ்தாத் தொடர்தொண்
டாய மாண்பின ரடங்கிவாழ் வுறவவ மதித்தோர்
பேய னீங்கெனக் கிணையெவ ரெனப்பல பிதற்றப்
போய தாமவை யடக்கிய லெனப்புறம் போந்த. (௬௧)

1773 புகழு மெய்ப்பொரு ளுரையவன் மனதுறுப் புன்மை
நிகழு மெல்லையில் [1]விளைவழி யறிதலா னிமல
னுகளும் வெண்டிரைப் புவியினீ யிக்குல மொருவி
யிகழ்கு ணத்தகூத் திரனெனப் பிறத்தியென் றிசைத்தான்.

---

[பி-ம்.] [1] வினைவழி. சா.

1774 குரவ னாற்கொடுஞ் சாபமெய் தியவிழி குணத்தோ
னுரவு நீர்சுலா முலகமு தியமுற வுதித்த
வரவ நீரரு வியின்வள னுறுதவச் சயிலத்
திரவ லாளரிற் றிரிதரு முணவுமொன் றிலனே. (சக)

வேறு.

1775 உண்டிப் பொருட்டா லலமருநா
ளோயிலங் கொருநா ளதற்கருகாய்ப்
பண்டிப் புவன மொருங்களந்த
பரன்பூ சையுறுந் தினகரத்துன்
மண்டிக் கிளர்ந்த புதரினையே
வழிப்பட் டனரா மதியுடையோர்
தொண்டிற் புகுந்து நிரந்தரமுந்
தொலைத்தான் பிறவி தொலைப்பானே. (சஉ)

1776 கழுவா மணியுட் சுடர்பொதிந்த
களங்க மதனைக் கதிர்மணியின்
வழுவாய்ந் தறிஞர் துடைத்தழகு
வழங்குந் திறத்திற் பொலிந்ததுகை
தொழுவார் நயனங் களிகூரத்
தும்பி யழைநா ளுவணனிலன்
றெழுவான் கமலத் திருவுடன்வாழ்
விணங்கி யிருக்குந் தினகரமே. (சங)

வேறு.

1777 பனக வன்பிடர் மிசைநடம் பயின்றருள் பரமன்
றினக ரத்தினுண் மிடைந்தபுற் குலந்தொலைத் திடல்கண்
டனக னுமிவன் றனக்கினி மறுமையி லழியாக்
கனக நாடளிக் குவனெனக் குறித்துளங் களித்தான். (சச)

வேறு.

1778 கொன்னார்திகிரிவலத்தமைத்தகோமானருள்பெற்றனனுகிச்
சின்னு ளதுசே றலுக்தடித்தின் செயலா நிலையவ் வுடனீங்கிச்
சொன்னுவலவர்புகழ்தருமச்சுரும்பின்புறத்தோர்சிறார்க்கு
முன்னும் வினேஞன் குலமடக்தை யிடத்தே மகவாய் முன்னினனே.

வேறு.

1779 பையார்ந்த பொறியரவப் பள்ளியுளான்
பரனெனுஞ்சொற் பயின்ற பஞ்சிற்
றய்யார்ந்த கொழுஞ்சுடரைப் பொருவருநுண்
ணறிவுடையோர் துதிக்குந் தூயோ
னையாண்டு கழித்தனனு வறிஞரவைக்
களத்தினுட்புக் கறிவ தெல்லா
மெய்யாக வறிந்ததற்பி னூழ்வினையுந்
தியவழியே விந்தஞ் சார்ந்தான். (சசு)

1780 நன்னெறியா லிழைத்தபொரு ணனியிருப்ப
நிரந்தரநல் கூர்ந்து ளாரிற்
புன்னெறியாற் பொருள்படைப்பா னகத்தெழுந்த
வேணவாப் புறத்தே யுந்தக்
கொன்னெறிசால் சுறவியங்குங் கருங்கடலுட்
கும்புயர்நா வாய்க டாவிச்
சென்னெறியாங் கதனகத் தாழ்ந் துயிர்முதல்யா
வையுமிழந்த சிறுமை யோரின். (சஎ)

1781 விதியினு லமைத்துயர்ந்த மேதகவுற்
றுளதாயு மீண்டு நீண்டு
மதியின்வா னகடுரிஞ்சிக் கதிர்விரிமண்
டலமுழுது மறைத்த காலைப்
பொதியின்வாழ் வுறுதலைமைக் குறுமுனிகால்
விரனுதியிற் புதைந்து நாகர்
பதியினுழ் பிலம்புகுமப் பருப்பதத்தோர்
வடநிழல்வாய்ப் பரிவி னின்றான். (சஅ)

வேறு.

1782 நின்ற வேலையுட் பசுந்துழாய் புனைந்ததோ ணிமலன்
மன்ற வான்சுவை யமிர்திவ னினிமறு பிறப்பிற்
சென்ற டைந்திடற் குரியனென் றட்கொளுந் திறத்தால்
வென்றி யஞ்சிறைக் கலுழவா கனத்தின்மேல் விரைந்தே.

1783 தெண்டி ரைக்கருங் கடற்கலா பாரிதிண் புயத்தும்
முண்ட கத்தம ணியத்திரு மார்பினு முயங்க
வண்டர் நாயக னற்புதத் துயின்முகத் தவனும்
வண்ட மிழ்க்குரு காபுரி வருகென மறைந்தான். (௫0)

இவையிரண்டுந் தொடர்.

வேறு.

1784 மருளுமன மிலனாகி மதலையவன் விழியாமுன்
வரதனெதிர் நிலைகாணிலா
னருவியிரு புடைவீழு மிமயநெடு வரைபோலு
மழுதபுன லாமூழ்கவே
யுருகியதி சயஞான விளைவுபயில் பவனாகி
யுபநிடத முதலாகிவாழ்
திருமருவு மணிமார்ப னொருபொழுது மகலாத
திருநகர மவணேகுமே. (௫க)

1785 கடமொழுகு கவுள்வேழ மழையினின மெனநீடு
கணமலைகள் பொறைவாழ்வுகூர்
படமுடைய வுரகேசன் முடியளவு குழிநீர்மை
பயிலுநதி பலமூழ்கியே
குடமுனிவ னகலாத மலையமக ளெனுமேன்மை
குலவுபொரு நையுமாடினாண்
மடலவிழ வளிமூசு துளபமுதல் வனைஞான
மதலைவழி படுநாளின்வாய். (௫உ)

வேறு.

1786 கருங்கடல்பற் பலவடிவாய் வடவையுருஞ்
சமுழுபய கண்க ளாகப்
பொருங்கடன்பெற் றடல்யமனும் வெருக்கொளத்தா
னவரெனப்பேர் புனைந்தோர் தம்பா
லொருங்கடல்குன் றினராகித் துறக்கமிழந்
தனையிமையோ ருலப்பில் கீர்த்திப்
பெருங்கடன்பெற் றயர்குலிச னெடுமுறைப்பட்
டனர்முளரிப் பெம்மாற் கன்றே. (ருங)

1787 முறையிட்ட விமையவர்கோன் முதலாய
வனைவருக்கு முகமன் கூறி
நறையிட்ட கொழுங்கமலப் பொற்பொகுட்டா
சனத்திருக்கு நாத னென்போ
னிறையிட்ட பல்லுலகம் படைத் தவைகாத்
தழிப்பதற்கு நின்ற செய்கை
துறையிட்டங் கவற்றினுட்காப் பதற்கிருந்தோன்
சுடராழித் தொல்லோ னென்றால். (ருச)

1788 அளக்கரிதா கியுமகில பாந்தாம
மெனநிலைத்தா யழியா வின்பங்
கொளத்தகுவோர் வருகவெனத் [1] தமிழ்க்குருகா
புரியெனப்பேர் குறிப்ப தாகித்
துளக்கமுறுந் திருநகரத் தனைத்துலகுங்
காப்பதற்குத் துளபச் சோதி
விளக்கமுறும் படிகுடிகொண் டிருந்தனனுங்
கெழுகவென மீண்டா ரன்றே. (ருரு)

---

[பி-ம்.] [1] தமிட்குருகா. ச.

1789 அச்சிரா மதனனுக்கு முருவளித்துத்
துறக்கமுமைங் கணைக்கி ழாக்கிக்
கச்சிரா தோங்குமுலை யயிராணி
முதலெழுவர் காதல் கூரும்
வச்சிரா யுதனயிரா வதப்பிடர்கின்
றிழிந்துநகர் வாழ்வைக் கண்டே
மெச்சிரா சதப்பொருநைப் புனலாடி
நகரிவல மேவி மாதோ. (ருசு)

1790 மையாழி வண்ணாவுன் மெய்வடிவங்
காண்பதற்கு வாழ்வு கூரு
மெய்யாக வாயிரங்கண் ணளித்தவனைத்
தொழுதுவல மேவி யேத்தக்
கையாய தாயிரமுங் காலாய
தாயிரமுங் காமர் நாவோர்
பொய்யாதிங் காயிரமுந் [1]தருதியெனாத்
தருமலர்தூஉய்ப் போற்றி னானே. (ருஎ)

வேறு.

1791 சாவ தன்றியே பிறப்பதுஞ் சரிதையிற் றனதானேன்
காவல் பூண்டதுன் கடனென வறிந்துநீ கைக்கொள்வான்
பாவ மென்பதே பாதகா ணிக்கையாய்ப் படைத்தேன்மே
லாவ தேதெனத் தெளிகிலேன் றெளிவிலே னருளெந்தாய்.

1792 உரகன் றாங்கிய விருநிலத் துனதடிக் குரியோராம்
விரதம் பூண்டவர் சுகத்தினுக் கெனதுவிண் மிசைப்போக
நரகென் றானின தடியருக் கடியராய் நலனெய்துஞ்
சரதந் தானெனக் கென்றுகொல் லறிகிலேன் சரணெந்தாய். (ருகூ)

வேறு.

1793 நொந்தா குலமுற் றிபநின் றழைநா ளாதிவன் படையோடும்
வந்தாய் வந்தா யழலா யறலாய் வானாய் நிலனாவாய்
சிந்தா மணியே திசையா னனனைத் திருநா பியின்முன்னர்த்
தந்தாய் தந்தாய் காராய் துளபத் தாரா யிருதாளே. (சுo)

---

[பி-ம்.] [1] தகுதியெனத். ச.

வேறு.

1794 ஐம்பதா மெனவே யமைத்தகோ டியவா
மண்டம்யா வையுமகத் தடக்கிப்
பம்புவான் புனன்மீ தாலிளந் தளிரிற்
பச்சிளங் குழவியா யதலாற்
செம்பொன்மே ருவினு மணுவினும் வியாத்தி
சிறந்தவோ ரன்னபே ருருவி
னும்பர்நா யகநின் சதிர்களை யுணர்வா
னுணர்தலா லுருகுமென் னுளமே. (சுக)

வேறு.

1795 கழிந்த சனனத் தலப்பிலவாங்
காலத் துலப்பில் படிமத்தா
விழிந்த தொழில்கூர்ந் தவற்றினுளோர்
கணத்தன் றிழைத்த வினைக்கயன்பான்
மொழிந்த கருப்பம் பலநரகின்
மூழ்கும் படித்தா யினுமுணர்ந்தார்க்
கழிந்த தெனவீ டருளுதிநின்
னருள்வித் தகம்யா ரறிவாரே. (சுஉ)

வேறு.

1796 பொன்னம் பதியிற் பதுமத் தயனிற் புனையப் படுவார்மீ
தின்னம்பதிவேறுளதோவிலதோவென்றெண்ணியதெல்லா
நின்னம் பதியைத் தெரிசித் திடநீ ளிடைசென் றதுநீணீ
ரன்னம் பதியுங் கமலத் தடமே யாழிப் படையானே. ()

வேறு.

1797 வித்தாய் முதலிற் சிதையா தருளா
மிளிரங் குரமுற் பனமா யுயிரின்
கொத்தா னதையே தழைதந் தகிலங்
குறையா வகைபூத் துயர்முப் பழமீன்

றெத்தா ரணியும் பொதியத் தருபே
　　ரின்பந் தருமெய்த் தருவே யுனைவிட்
டத்தா ரணிவாழ் தருவிற் கடியே
　　னசைப் படுமா றறியே னினியே. (சுச)

1798 பனிமா மதிமந் தரமால் வரைவன்
　　படவா ளரவஞ் சுழலா துழலுந்
தனிவா ரியுடன் றிரள்வா னவர்கைத்
　　தலமுஞ் சலியா துணர்வா ருணர்விற்
கினிதா யிதையச் சலரா சியுணீ
　　டின்பத் திருவோ டன்புற் றெழுசெங்
கனிவா யமுதே யெவரே யினிநின்
　　கடல்வா யமுதுண் பவர்கா முறவே. (சுரு)

1799 அங்கைத் தலமீ துயர்மா நிதிவைத்
　　தருணண் மலர்மா நிதியா கமும்வெண்
சங்கச் சுடர்மா நிதிவண் புயமுந்
　　தனைமா நிதிநீ யெனுமுண் மையுரூ
தெங்கட் கருள்சங் கொடுகஞ் சமுமே
　　யெழின்மா நிதியென் றின்புற் றனமே
செங்கட் கரியாய் பிறர்கட் கரியாய்
　　சிறுகட் கரியாய் தருசிற் பரனே. (சுசா)

வேறு.

1800 முப்போது மனுபவஞ்செய் தெட்டெழுத்து
　　மொழிவறவே மொழிவோர் போலக்
கைப்போது தூவியுநின் காற்போது
　　தனைவழுத்துங் கருத்தி லேமாற்
பொய்ப்போதந் தவிர்த்தவர்பான் மெய்ப்போதங்
　　கொடுத்தினிமைப் பொருளா நாதா
வெப்போதிங் கெமையடிமைக் கொளக்கருணை
　　புரிந்திடுமா றெங்கோ மானே. (சுஎ)

1801 சொற்குன்று திமையவர்தாங் குலிசனெடுங்
துதித்தனராய்த் தூய ஞான
நற்குன்று கியபுனிதன் றிகழ்தானத்
தடிக்கடிதூய் நயந்த போதாற்
கற்குன்ற மல்லால்வெள் ளிக்குன்ற
மல்லாற்செங் கதிர்சூழ் சோதிப்
பொற்குன்ற மல்லாலோர் பூங்குன்று
முண்டெனலாய்ப் பொருந்திற் றன்றே. (சுஅ)

வேறு.

1802 மண்டு தெண்டிரைப் பாற்கடற் றுயின்றமா மணியைத்
தொண்டு பூண்டருச் சனைசெயத் தோடவிழ் தலும்வாய்
விண்டு தேன்றுளி மலர்க்கையி னவன்வர விபுதர்
கண்டு சூத்திர னிவனென வெறுத்தனர் கடிய. (சுகூ)

1803 மலங்கு கண்ணிணை கலுழ்ந்தநீர் தனதுர மறையா
விலங்கு பூசனைக் கெடுத்தகை மலர்வெடித் திழிதேன்
கலங்கு தெண்டிரைக் கடற்கலை மகளுரங் கவிப்ப
நலங்கொள் வித்தக னடந்துபோய் வடதிசை நயந்தான். ()

இரண்டுந் தொடர்.

1804 வண்ண மாமலர்க் கண்ணிணை மறைந்துவா னவர்தா
மெண்ண முற்றிவை யெவன்கொலென் றிரங்கிய காலை
விண்ம றைந்தொரு குரல்பரந் தாமனை விரும்பும்
புண்ணி யன்றனை யிகழ்ந்ததீங் கிதுவெனப் புகல. (எக)

1805 அண்டர் யாவரு மதிசயித் தருணிலை குலாய
தொண்டு பூண்டவன் சரணம தடிக்கடி தொழுதுட்
கொண்டு போற்றிநின் றிடருறு மெளிமையைக் குறித்தே
பண்டு போல்விழி கொடுத்தனன் பசுந்துழாய்ப் பரமன். ()

இரண்டுந் தொடர்.

1806 திமை யாவையுங் கடந்துநன் னியமமே சிறக்குந்
தூய்மை யாளனை யடைந்துவா னவரடி தொழுது
வாய்மை யாயிடர் தவிர்த்[1]தரு ளுதியென மருட்குச்
சேய்மை யான்றவிர்த் தாள்வனென் றனனிடர் தீர்ந்தார். ()

வேறு.

1807 அவ்வுரைபெற் றிமையவர்தா நின்றளவின்
மறைமுதலா வமைந்த நூலி
னெவ்வுரையுந் துணிந்தறிதற் கரியானை
யடியவருக் கெளிதா வானை
வெவ்வுரைகற் றவர்மருங்கு குறுகானை
மறுகானை விளம்பு வானைச்
செவ்விமலர்த் திருமகடன் கோமானை
மெய்ந்நெறிசால் செம்மல் போற்றும். (எச)

1808 வாமனனம் பிகையகலா மழவிடையோன்
பாலாழி வழங்க வேறு
வாமனனம் பொன்னுலகம் புரந்திடமா
வலிதனைவன் சிறையில் வைத்த
வாமனனம் போருகத்தா ளுறைமார்பன்
குணநினைந்து வழுத்தி வாழ்த்த
வாமனனம் பழவினைபோய்ப் பெறற்கெளிதாம்
வைகுண்ட வாழ்வு மன்னோ. (எரு)

1809 ஆடகனு டகநடுங்க மதலையின்முன்
மதலையின்முன் னுளே ருய்க்கண்
கோடலைக்கோ டலைக்குருதி பொழியவுர
முழுதழுது கொன்றி லாயேற்
சேடனிற்றுங் கியபுவனத் தொருங்குனைப்போல்
விராயதெனச் சிறந்துகற்பா
நாடநிலை பெறுத்துவதார் நாராய
ணவெனும்பேர் நாதா நாதா. (எசு)

[பி-ம்.] [1] தருளுதியெனு. சா.

வேறு.

1810* பொருந்தார் பொருந்தார் வரை[1]மார்பம்
புதையப் புதையப் புதைவரிவில்
வருந்தா வருந்தா பதன்மனது
களிக்கக் களிக்க மிதிலைபுகுந்
திருந்தா ரணியோர் புகழவளைத்
[2]திறுத்தா யிமையோ ரிடுக்கணுறு
தருந்தா ரமுதன் [3]றருள்வாய்நின்
னடியே சரணென் றடைந்தேனே. (எஎ)

வேறு.

1811* இமையவரை யிமையவரை [4]வியப்பிப்பான்
பொருவில்பொரு வில்லா யேந்திச்
சமையவுடக் குபுசரந்தொட் டெயிலொருமூன்
றெரிகதுவத் தலைநாள் வென்ற
வுமையவரு மதிப்பவெயி லேழுடையான்
[5]சிரமொருபா னுதிர்வ தாயா
டமையமைவில் லினைவளைத்தன் றேவினையே
வினை[6]யுனைப்போன் றளியார் யாரே. (எஅ)

1812 *உமையாளு முமையாளும் பசுபதியு
மும்பரினும் பரின்வாழ் [7]வொன்றுஞ்
சுமையாக நிலைபெறுமீங் கிதுகிளையே
லெனநந்தி சொன்ன போது
மமையாதுன் னமையாதுன் [8]னருங்கயிலை
கிளைகிளைக்கை யரக்க [9]னுவி
கமையாலெய் தியவரங்க ளெம்மானே
களைந்திலையேற் களைகண் யாரே. (எகூ)

---

[பி-ம்.] [1] மார்பிற். [2] திறுத்தா னிமையோ. [3] றருள்குடந்தை யாரா வமுதென் னகத்தமுதே. [4] மகிழ்விப்பான். [5] பஃறலைக்கு முறையூராயா. [6] நினைப்போன். [7] வெய்துஞ். [8] னக்கயிலை. [9] னுதி, கமையாலெய்திய வரங்கள் காட்கரையாய். மா.